பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

விலை ரூபா: 8.00 *Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 சித்திரை 21 புதன்கிழமை (04.05.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 136

MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ராம்கோ சீமெந்து

## கழுத்தில் வெட்டுக்காயம்; இளைஞனின் சடலம் மீட்பு!

### நல்லூர் மருதடியில் பயங்கரம்

(யாழ்ப்பாணம்)

கழுத்துப் பகுதியில் வாள்வெட்டுக்கு இலக்காகி உயிரிழந்த நிலையில் இளைஞன் ஒருவரின் சடலம் நேற்று அதிகாலை மீட்கப்பட்டுள்ளது.

பொஸ்கோ பாடசாலைக்கு அண்மையில் உள்ள மருதடி லேனிலேயே இச்சடலம் மீட்கப்பட்டது.

அதே இடத்தைச் சேர்ந்த மான்வேட் கபில்டன் (வயது 21) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

சம்பவம் பற்றித் தெரியவருவதாது,

பிரஸ்தாப இளைஞன் தனது நண்பனின் பிறந்ததின விழாவிற்கு நேற்று முன்தின மிரவு சென்றுள்ளார். பின்னர் நள்ளிரவில் வீடுதிரும்பும்போது இனந்தெரியாதோரால் அவரது வீட்டிற்கு முன்னால் வைத்து கழுத்திலும், தலையிலும் கோரமான முறையில் வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதிகாலை ஒரு மணியளவில் பிரஸ்தாப இளைஞனின் வீட்டுக்குள் கள்வன் புகுந்ததாகவும், அதேவேளை கூக்குரலிட்டவாறு கள்வனைத் துரத்திக்கொண்டு வெளியே வந்தபோது பிரஸ்தாப இளைஞனை சடலமாக மீட்டதாகவும் உறவினர் தெரிவித்தனர்.

வீட்டிற்கு முன்னால் கோரமான முறையில் வெட்டப்பட்டு சடலமாக தனது சகோ

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வேலைநிறுத்தம்

நாடு முழுவதிலும் அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவதற்கு இலங்கை மின்சாரசபையின் தொழில்சங்கக் கூட்டமைப்புத் தீர்மானித்துள்ளது. இந்த அடையாள வேலைநிறுத்தம் இன்று நண்பகல் முதல் இடம்பெறவுள்ளது.

முக்கிய மூன்று கோரிக்கைகளை முன்வைத்தே இந்த அடையாள வேலைநிறுத்தப் போராட்டம் நடாத்தப்படவுள்ளது. (ச8)

## பீற்றர் ஹரோல்ட் புத்தளம் விஜயம்

உலகவங்கியின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட் எதிர்வரும் 6 ஆம் திகதி புத்தளத்திற்கு விஜயம் செய்யவுள்ளார். வடபகுதியிலிருந்து இடம்பெயர்ந்து புத்தளத்தில் தங்கியுள்ள முஸ்லிம்களுக்கு தற்காலிக வீடுகளை அமைத்து கொடுப்பது தொடர்பாக ஆராயவே அவர் அங்கு செல்லவுள்ளார். (ச-15)



## அரசு கவிழ்ந்தாலும் - பதவிபோனாலும்

## பொதுக்கட்டமைப்பை உருவாக்குவேன்

### ஜனாதிபதி சந்திரிகா சபதம்

**அரசு கவிழ்ந்தாலென்ன அல்லது தனது ஜனாதிபதிப் பதவியே இல்லாமல்போனாலென்ன உயிர்போனாலும்கூட அவற்றைப் பொருட்படுத்தாமல் நாட்டின் சமாதானம் என்ற நோக்கத்திற்காக பொதுக்கட்டமைப்பினை உருவாக்கப்போவதாக ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.**

ஆழிப்பேரலையின் பின்னரான பொதுக் கட்டமைப்பினை எவ்வித எதிர்ப்பு வந்தாலும் அதனை உருவாக்குவதில் பின்னடிக்கப்போவதில்லையென அவர் தெரிவித்தார்.

நேற்று பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற சர்வமதத் தலைவர்களின் கூட்டத்தின்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகளின் வாழைச்சேனை அரசியல்துறை அலுவலகம் மீது தாக்குதல்

மட்டக்களப்பு வாழைச்சேனையிலுள்ள விடுதலைப் புலிகளின் அரசியல்துறை அலுவலகத்தின்மீது நேற்று முன்தினமிரவு கைக்குண்டுத் தாக்குதல் மற்றும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இரண்டு கைக்குண்டுகள் வீசப்பட்டதன்

அரசியல்துறையின் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

சம்பவத்தையடுத்து வாழைச்சேனைப் பொலிஸார் ஸ்தலத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். அத்துடன் தேடுதலையும் நடாத்தினர். தேடுதலின்

## டக்ளஸ் - மகேஸ்வரன் எம்.பி நேற்று சபையில் காரசாரமான விவாதம்!

(கொழும்பு)

இந்து கலாசார அமைச்சரும் ஈ.பி.டி.பியின் செயலாளருமான டக்ளஸ் தேவானந்தாவிற்கும், ஐக்கியதேசியக் கட்சியின் கொழும்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரனுக்கும் இடையில்

லும், அங்கு உயர் பாதுகாப்பு வலயங் காரணமாக அடியார்கள் சென்று வழிபடக் கூடிய நிலைமை காணப்படவில்லை என மகேஸ்வரன் குற்றஞ்சாட்டினார்.

இதன்போது குறுக்கிட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, விடுதலைப் 'புலிகள்

மட்டக்களப்பு வாழைச்சேனையிலுள்ள விடுதலைப் புலிகளின் அரசியல்துறை அலுவலகத்தின்மீது நேற்று முன்தினமிரவு கைக்குண்டுத் தாக்குதல் மற்றும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இரண்டு கைக்குண்டுகள் வீசப்பட்டதன் காரணமாக அலுவலகக் கட்டடம் பலத்த சேதத்திற்குள்ளாகியதாகவும், எனினும் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை எனவும் விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு அரசியல்துறையின் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

சம்பவத்தையடுத்து வாழைச்சேனைப் பொலிஸார் ஸ்தலத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். அத்துடன் தேடுதலையும் நடாத்தினர். தேடுதலின் போது துப்பாக்கி ஒன்று கண்டெடுக்கப்பட்டது.

இதேவேளை இச்சம்பவம் தொடர்பாக

(12 ஆம் பக்கம் பார்க்க)

(கொழும்பு)

இந்து கலாசார அமைச்சரும் ஈ.பி.டி.பியின் செயலாளருமான டக்ளஸ் தேவானந்தாவிற்கும், ஐக்கியதேசியக் கட்சியின் கொழும்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரனுக்கும் இடையில் நேற்றுப் பாராளுமன்றத்தில் கடுமையான வாதப்பிரதிவாதம் இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்தில் இந்துக் கோயில்களுக்கு நிதியுதவிகள் வழங்கப்பட்டபோதிலும், அங்கு உயர் பாதுகாப்பு வலயங் காரணமாக அடியார்கள் சென்று வழிபடக் கூடிய நிலைமை காணப்படவில்லை என மகேஸ்வரன் குற்றஞ்சாட்டினார்.

இதன்போது குறுக்கிட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, விடுதலைப் புலிகள் தமது பயங்கரவாத நடவடிக்கைகளை நிறுத்தும்போது தாங்களாகவே அடியார்கள் குறித்த கோயில்களுக்கு சென்றுவழிபட முடியுமென்றார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## கலவானை பிரதேச சபை உறுப்பினர் நேற்றுக் காலை சுட்டுக்கொலை

(கொழும்பு)

இரத்தினபுரி கலவானை பிரதேசசபை உறுப்பினர் எச்.எம்.வசந்த நேற்றுக் காலை இனந்தெரியாதோரினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

கலவானை பிரதேசசபையின் ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினரான வசந்த, இரத்தினபுரியிலுள்ள பிரபல மாணிக்க வியாபாரியாவார். இவரது கடையும் கலவானைப் பகுதியிலேயே உள்ளது.

நேற்று தனது கடைக்கு வந்தபோது காலை 11.30 மணியளவில் கடைவாசலில் வெள்ளைநிறக் கார் ஒன்றில் வந்த இருவர் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தபின்னர் தப்பிச்சென்றுள்ளனர்.

இதன்போது இவருக்கு அருகிலிருந்த நபரும் காயமடைந்துள்ளார். காயமடைந்தவர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சிவராமின் கொலையை கண்டித்து




## கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

கடத்தப்பட்டு படுகொலைசெய்யப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் மாமனிதர் சிவராமின் கொலையைக் கண்டித்து கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டமொன்று நடைபெற்றது.

சுதந்திர ஊடக இயக்கம், இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம், தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், அகில இலங்கை பத்திரிகை தொழிற்சங்க தொழிலாளர் சம்மேளனம் என்பன இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தினை மேற்கொண்டன.

கோட்டை ரயில்நிலையத்திற்கு முன்பிருந்து ஆரம்பமான இவ் ஆர்ப்பாட்டப் பேரணியானது லேக்ஹவுஸ் சுற்றுவட்டம் வரை சென்று மீண்டும் ஆரம்பமான இடத்தைச் சென்றடைந்தது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் பின்வரும் வாசகங்கள் எழுதிய பதாகைகளையும், சிவராமின் உருவப்படத்தையும் தாங்கியிருந்தனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
யாழ் – கொழும்பு
விமான பயணத்திற்கு அழையுங்கள்:
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891/6297, 0772 2349999/8888
கொழும்பில் - 011 2372952/3, வெள்ளவத்தையில் - 011 2360290/91
Email- jaffna@expoavi.com, reservations@expoavi.com


# சிறப்புற நடைபெற்ற இந்து விழிப்பு வார நிகழ்வு

இலங்கை சின்மயா மிஷனின் இந்துவிழிப்பு வார நிகழ்வுகள் அண்மையில் இராமபோடை ஆஞ்சநேயர் ஆலயத்தில் மூன்று தினங்கள் வெகுசிறப்பாக நடைபெற்




றது.

இந் நிகழ்வில் இந்தியாவிலிருந்து வருகை தந்திருந்த இலங்கைக்கான வதிவிட ஆச்சாரியார் பிரமசாரி ரமணசைதன்யா சுவாமி தலைமையில் இலங்கை சின்மயா யுவகேந்திராவினைச் சேர்ந்த இளைஞர் அணியினால் நடாத்தப்பட்டது.

'இராம பக்த ஹனுமான்' எனும் தலைப்பில் சொற்பொழிவினை சுவாமி வழங்கினார். இந்து விழிப்பு வாரத்தின் மாலை நேர நிகழவுகளாக கண்ணன்திரைப்படமும் சம்பூர்ண இராமாயணம் திரைப் படமும் பிரமாண்டமான அகலத் திரையில் காண்பிக்கப்பட்டன.

இந்து விழிப்பின் நிறைவுநாள் நிகழவின் போது பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்ட கலை கலாசாரப்போட்டி மற்றும் வினாடி வினாப்போட்டிகளின் இறுதிச் சுற்று நிகழ்வுகள் மேடையேற்றப் பட்டன.

இலங்கை சின்மயாமிஷன் தனிமனித அகமலர்ச்சி இந்து சமுதாய மறுமலர்ச்சி என்னும் நோககுடன் மக்களிடையே சமயப் பிரச்சாரங்கள், கலை கலாசார நிகழ்வுகள் மற்றும் மறுமலர்ச்சிப் பணிகள் என்பனவற்றைச் செய்து

**ம.நிவேதிகா**

வருகின்றது. இதன் முக்கிய செயல்திட்டமாக இராமபோடையில் பெரிய அனுமன் ஆலயம் ஒன்றினை அமைத்துள்ளது.

இராமபோடை இந்துவிழிப்பில் இலங்கையின் பலபகுதிகளிலுமிருந்து இளைஞர்கள் யுவதிகள் மற்றும் பெரியோர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். □

# அராஜகச் செயற்பாடுகளை தமிழினம் இனியும் பொறுமையுடன் பார்த்துக்கொண்டிருக்க மாட்டாது

## தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம்

(யாழ்ப்பாணம்)

பிரபல பத்திரிகையாளரும் இராணுவ அரசியல் ஆய்வாளருமான சிவராம் எனும் ஒரு மாமனிதனை இன்று தமிழினம் இழந்து நிற்கின்றது. இதற்கு ஸ்ரீலங்கா அரசே முழுப பொறுப்பினையும் ஏற்கவேண்டும். இக் கொடுமையான கொலையினை சிங்கள இராணுவப் புலனாய்வாளர்களும் அவர்களுடன் இணைந்து செயற்படும் தேசவிரோதக் குழுவுமே ஒப்பேற்றியுள்ளது.

சிவராம் சிங்கள அரசின் சமாதானத்தின் மீதான போலியான போக்கினையும் தமிழ் இனததின் மீதான அராஜகங்களையும் துணிந்து சர்வதேசத்துக்கு ஊடகங்கள் மூலம் வெளிக்கொணர்ந்தவர்.

இவ்வாறே தமிழர்களுடைய பிரச்சினைகளை வெளிக்கொணர்ந்த நிமலராஜன் மற்றும நாட்டுப்பற்றாளர் நடேசன தொடக்கம் இன்று சிவராம் எனும் மாமனிதனையும் ஸ்ரீலங்கா பேரினவாதிகள் கோழைத்தனமான முறையில படுகொலை செய்துள்ளனர். இவ்வாறு அரசால் இவர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளமையானது ஊடகத்துறைக்கும் அதன் சுதந்தரத்துக்கும் விடப்பட்ட பெரும் சவாலாகவே நாம் கருதுகின்றோம்.

இவ்வாறு சிங்கள அரசின் கோழைத்தனமான செயல்களானது. உண்மைச் செய்திகளை உலகுக்கு வெளிப்படுத்தும் பிரபல தமிழ் ஊடகவியலாளர்களைப்படுகொலை செய்வதனூடாக சர்வதேசத்துக்கு உண்மையான செய்திகளை சென்றடையாமல் தடுப்பதற்கே அரசு முயல்கின்றது என தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் குற்றம்சாட்டியுள்ளது.

சிவராம் காலத்துக்கு காலம் உண்மையான செய்திகளையும் ஜதார்தமான இராணுவ அரசியல் ரீதியான ஆய்வுகளையும் பத்திரிகை வாயிலாக வெளிக்கொணர்ந்தவர். இவரின் வீடு அடிக்கடி பல தடவைகள் ஸ்ரீலங்காப் புலனாய்வாளர்களினால் சோதனைக்குள்ளாக்கப்பட்டதும் இவரும் அடிக்கடி விசாரணைக் குட்படுத்தப்பட்டதும் யாவரும் அறிந்ததே.

அத்துடன், சிவராம் சிங்கள அரசின் சட் டங்கள், கொள்கைகள் உருவாக்கி நடைமுறைப்படுத்தப்படும அதியுயர் பாதுகாப்பு வலயமான பாராளு மன்ற கட்டடத்தொகுதியினுள்ளேயே கொலை செய்யப்பட்டமையை சிங்கள அரசினால் மூடி மறைக்க முடியாது. இதனை செய்தது சிங்கள புலனாய்வாளரும் அதனோடு இணைந்து செயற்படும் தேசவிரோதக் குழுக்களுமே ஆகும். அரசே சிவராமின் கொலைக்குப் பதில் சொல்ல வேண்டும்.

இக் கொலைகள் மூலம் இலங்கை அரசினால் ஊடகச் சுதந்திரம் மறுக்கப்படடிருப்பதை சர்வதேசமும் புரிந்து கொள்ளவேண்டும். இவ்வாறு அரசு மேற்கொண்டுவரும் ஊடகவியலாளர் மீதான தாக்குதல்கள் உடன் நிறுத்தப்பட வேண்டும்.

அத்துடன் உண்மையான கொலைசூத்திரதாரிகளைக் கண்டுபிடித்து அவர்களுக்குகெதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ஆனால், அரசினால் அது முடியாத காரியம் ஏனெனில், கொலையை செயததே. சிங்கள அரசின் ஆதரவுடனேயே.

இவ்வாறான படுகொலைகளை நாம் வன்மையாக கண்டிப்பதோடு தமிழினம் தொடர்ந்தும் இவ்வாறான சம்பவங்களை பார்த்துக்கொண்டிருக்க மாட்டாது என்பதையும் சொல்லி வைக்க விரும்புகிறோம். எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் விடுதத அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-4)

# சட்டவிரோத மணல்லொறி பொலிஸாரால் மடக்கிப் பிடிப்பு

(கல்வியங்காடு)

சாவகச்சேரியிலிருந்து கோப்பாய் சந்தியூடாக சட்டவிரோதமாக மணலை ஏற்றிச் செல்ல முற்பட்ட லொறி ஒன்றை கோப்பாய் பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளனர்.

அண்மையில் வரணி வடக்கைச் சேர்ந்த நபர் ஒருவருக்கு சொந்தமான லொறியே இவ்வாறு பிடிக்கப் பட்டது. லொறி உரிமையாளரும் கைது செய்யப்பட்டார்.

கடந்த வெள்ளிக்கிழமை பொலிஸாரால் இந் நபர் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டபோது, யாழ்.மாவட்ட நீதிபதி இதவிக்னராஜா அபராதமாக 10 ஆயிரம் ரூபாவையும் தர்மபணமாக 5 ஆயிரம் ரூபாவையும் செலுத்துமாறு உத்தரவிட்டதுடன் ஏற்றி வந்த மணலை நீதிமன்ற பாவனைக்கு பயன்படுத்துமாறும் கூறுனார். (க-7-74)

# இராசி பலன்

**04.05.2005**
**(சித்திரை 21 ,புதன்கிழமை)**
**ஏகாதசி மாலை 06.19 மணிவரை**
**பூரட்டாதி முன்னிரவு 08.11 மணிவரை**
**இராகுகாலம் 11.56 - 01.26 மணிவரை**
**சுபநேரம் 04.26-05.56 மணிவரை**
**அமிர்தசித்தம், ஏகாதசி விரதம்**

| | |
|---|---|
| மேடம் | பிதாசிந்தை, காரிய தாமதம், பணவிரயம், மனக்கிலேசம். |
| இடபம் | தொழில் சிந்தை, நண்பர்கள் சந்திப்பு, எடுத்தகருமங்கள் கைகூடும், கீர்த்தி. |
| மிதுனம் | சுபநிகழ்வு, கடின உழைப்பு, நல்ல தகவல, முயற்சி கைகூடும். |
| கடகம் | உடல் உழைப்பு, ஆன்றோர் மதிப்பு, அச்சமான நிலை, முயற்சி தாமதம். |
| சிங்கம் | எதிர்பாராத அச்சம், போசன சுகம், திடீர் நன்மை, ஆரோக்கியக் குறைவு, |
| கன்னி | திடீர் பயணம், அபூர்வ சந்திப்பு, போசன சுகம், காரிய அனுகூலம். |
| துலாம் | பண வருவாய்," சத்துரு ஜெயம், விருந்து பசாரம், தொழில் விருத்தி. |
| விருச்சிகம் | வியாபாரா நன்மை, மனக்கவலை, வேலைச்சுமை, காரிய தாமதம். |
| தனுசு | கல்வியில் ஆர்வம், அற்பர் உறவு, ரோக பயம், முயற்சி தாமதம். |
| மகரம் | இனிய அனுபவம், அந்நியர் சந்திப்பு, வாக்கு மேன்மை, புதிய பொருள் சேர்க்கை. |
| கும்பம் | பொருள் விரயம், உறவினர் உதவி, தொழில் நன்மை, மதிப்புக்குறைவு. |
| மீனம் | ஜனவசியம், நல்ல முயற்சி, ஆழ்ந்த சிந்தை, சயனசுகம். |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது

-வளவன்

# அடிக்கல் நாட்டும் விழா

(துன்னாலை)

சுனாமி அனர்த்த பணிமனையின் ஆதரவுடன் துன்னாலை கோவிற்கடவை சனசமூக நிலையத்தில் கியூ மெடிக்கா நிறுவனத்தால் பாலர் பள்ளி கட்டடத்துக்கான அடிக்கல் கடந்த சனிக்கிழமை நாட்டப்பட்டது. வடமராட்சி பிரதிக்கல்விப் பணிப்பாளர் வி.அருளானந்தம் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம விருத்தினர்களாகக் கடல் அனர்த்த புனர்வாழ்வுச் செயலணிக் குழு மாவட்ட நிர்வாக உத்தியோகத்தர்கள் இ.சந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன், வடமராட்சி சுனாமி அனர்த்தப் பணிமனைப் பொறுப்பாளர் சுபாலையா, கரவெட்டி பிரதேச செயலாளர் வே.குலநாயகம், வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் ந.இன்பன், முன் பள்ளி உதவிக் கல்வி பணிப்பாளர் துரைசத்தியசீலன் ஆகியோர் கலந்து கொண்டனர். (க-101)

# புதுக்குடியிருப்பில் விபத்து குடும்பப் பெண் மரணம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் நேற்றுமுன்தினம் பிற்பகல் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

புதுக்குடியிருப்பிலுள்ள மாவீரர் படிப்பகத்துக்கு அருகிலுள்ள சிறுவீதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. சிறுவீதியால் சென்ற உழவு இயந்திரம் ஒன்று குறிப்பிட்ட பெண் மீது மோதியதில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

முத்தயன்கட்டைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயான ரவீந்திரன் சுகிர்தா என்பவரே உயிரிழந்தவராவார். இந்த விபத்து தொடர்பான புதுக்குடியிருப்பு தமிழீழக் காவல்துறையினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-4)

# கருத்துரை அரங்கு

(யாழ்ப்பாணம்)

தமிழகத்தில் மொழியும் ஆட்சியரசியலும், பேச்சும் சொல்லணியும், மொழிசார் மானுடவியல், கவிதையியலும் ஆற்றுகையும், பால்நிலை - அரசியல் - வரலாறு, மொழியின் சமூகப்பண்பாட்டு வரலாறு தொடர்பான பல்வேறு ஆய்வுகளை நடாத்தியுள்ள அமெரிக்க யேல் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மானுடவியற்துறை துணைப் பேராசிரியரான கலாநிதி. பெர்ணாட்டு பேட்டின் 'மேடைத்தமிழ் பிரதியியமும் சமூகநிலை மாற்றமும்' என்ற பொருளிலான தமிழ்மொழி மூலமான கருத்துரை அரங்கு இன்று புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (க)

# கேணி புனரமைப்பு

(பொன்னாலை)

ஆனைக்கோட்டை எருக்கலம் பிட்டி இந்துமயானத்தில் உள்ள வைரவர் ஆலய கேணி புனரமைப்புச்செய்யப்படவுள்ளது.

ஆனைக்கோட்டை கிராம உப அலுவலக முன்னாள் சபை உறுப்பினர் க.சின்னத்துரை ஞாபகார்த்தமாகவே இக்கேணி புனரமைப்புச். செய்யப்படவுள்ளது. (ற-7-49)

# 250 சவரன் தங்க நகையுடன் தலை மறைவான ஜோதிடர்

'தெய்வீகத்தை நம்பும் திருந்தாத பெண்குலம்' என பாரதிதாசன் பாடியதை உறுதி செய்வது போன்ற பல சம்பவங்கள் தமிழ் நாட்டில் இன்றும் நடைபெற்று வருகிறது.

மந்திரம், தந்திரம், பில்லி, சூனியம், ஜோதிடம், அருள்வாக்கு என்ற போலிவார்த்தைகளை நம்பிப் பெண்கள் தமது உடமைகளைப்பறிகொடுக்கும் சம்பவங்கள் தமிழ் நாட்டில் இன்றும் நடந்து கொண்டு தான் இருக்கிறது. தாலி உட்பட 250 சவரன் நகைகளைப் போலி ஜோதிடரிடம இரு பெண்கள்பறிகொடுத்த சம்பவ மொன்று சமீபத்தில் நடந்துளளது. திருவள்ளுரைச் சேர்ந்த ஜோதிடர் மணிசர்மாவிடம்சென்னை மண்ணடியைச் சேர்ந்த ஹோமியோபதி வைதநியார் நிஷா, அவரது தோழி கவிதா ஆகிய இருவரும் ஜோதிடம் பார்க்கச் சென்றுள்ளனர்.

அப்பெணகளின் கணவன்மார்களுக்கு நாகதோஷம் இருப்பதாகக் கூறிய ஜோதிடர் அதற்குப் பரிகாரமாக அப்பெண்களின் தாலி உட்பட சகல தங்க நகைகளையும் வைத்தும் பூஜை நடாத்த வேண்டுமெனக் கூறினார்.

அவர்களும் ஜோதிடரை வீட்டுக் கழைத்து 250 சவரன தங்க நகைகளைக் கொடுத்தனர். அவற்றை ஒரு பெட்டியுள்போட்டு பூஜை செய்த ஜோதிடர் தான் கூறும் வரை பெட்டியைத் திறக்கச் கூடாது என்று கூறிச சென்றார். ஜோதிடரின் வார்த்தையில் சந்தேகமடைந்த அப் பெண்கள் பெட்டியைத் திறந்து பார்த்தபோது அதற்குள் வெறும் காகிதத்துண்டுகள் மாத்திரமே இருப்பதைக் கண்டனர்.

இது தொடர்பாக நிஷாவும் அவரது தோழியும் பொலிஸில் செய்த புகாரையடுத்து மததிய குற்றப்பிரிவு பொலிஸார் ஜோதிடரின் மனைவியை கைது செய்தனர் ஜோதிடர் 25 இலட்சம் ரூபா பெறுமதியான நகைகளுடன் தலைமறைவாகிவிட்டார். (து)

# விவாத அரங்கு - 8

விடயம்

**நம்மவர்கள் வெளிநாடு சென்றதனால்**

**எமது கலாசாரம்:**

✧ சீரழிந்துள்ளது.

✧ சீர்பெற்றுள்ளது.

**நடுவர்: சிரேஷ்ட சட்டத்தரணி திரு.சி.சிவநேசன்**

**உங்கள் வாதங்களை எழுதி அனுப்பி வையுங்கள்.**

அனுப்பவேண்டிய முகவரி :
விவாத அரங்கு, வலம்புரி,
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

# இன்று ஒரு தகவல்

## மாமியார் மகிமை

மாமியாருக்கும் மருமகளுக்கும் கருத்து வேறுபாடு வருவதற்கு என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்? அது ஒரு விதமீன மனோ தத்துவ பாதிப்புதான் வேறு ஒன்றுமில்லை அதை மனோதத்துவ ரீதியாகவே சரி செய்வதற்கு நமது முன்னோர்கள் சில பழக்க வழக்கத்தை சம்பிரதாயமாகவே ஏற்படுத்தி வைத்திருந்தார்கள்.

அதாவது முற்காலத்திலெல்லாம் மாமியார் தான் மருமகளுக்கு தீலைவாரி பின்னிவிடவேண்டும என்று ஒரு வழக்கத்தை வைத்திருந்தார்கள் இது எதற்காக? அந்தப் பெண் தனது தாய் தந்தையை விட்டுவிட்டு புதிதாக ஒரு இடத்துக்கு வந்திருக்கிறாள். அவளது மனதில் உள்ள இறுக்கம் குறைய வேண்டும். மனம் இலேசாக வேண்டும். ஒரு குழந்தையை மடியில் போட்டுக் கொண்டு அதன் தலையை வருடி விட்டால் அதன் கண்கள் சொக்கிப் போய்விடும் அது போல்தான் இதுவும் மாமியார் தலையைக் கோதிவிடுவதும் வருடிவிடுவதும் சடைபின்னி விடுவதும் மருமகளுக்கு இதமாக இருக்கும். இருவருக்குமிடையில் உள்ள மன இடைவெளி குறையும். புரிந்துணர்வு ஏற்படும்.

இதற்காகத்தான் அந்தப் பழக்கம் இருந்தாலும் இந்தக் காலத்தில் அது சாத்தியமா? என்பது யோசிக்கவேண்டிய விஷயம் ஏனென்றால் நான் கூட புதிதாக திருமணம் செய்த பெண்ணிடம இந்த ஆலோசனையைக் கூறிப் பார்த்தேன். 'நீங்கள் சொல்வது சரி சாா. அதை நான் மறுக்கவில்லை என் தலையை என் மாமியாரிடம் கொடுப்பதற்கு நான் தயராக இருக்கிறேன். அவர் அதை நீங்கள் சொல்வது போல் கோதிவிட்டால் பரவாயில்லை! அதற்குப் பதிலாக மோதிவிட்டால் என்ன செய்வது?" என்று கேட்டார் அவர். முன் ஜாக்கிரதையாக சுவரில் ஒரு தலையணையை வைத்துக்கொள்ள வேண்டியது தான் வேறு என்ன செய்வது?

இந்தப் பிரச்சினை இந்தக் காலத்தில் மட்டுமில்லை அந்தக் காலத்திலும் இருந்திருக்கிறது. நீண்டகாலத்திற்கு முன் ஒரு ஆள் இருந்தான். அவன் மனைவி கிழித்த கோட்டைத் தாண்ட மாட்டான் அப்பேற்பட்ட பதிவிரதன். மனைவிக்கு மாமியார் ஒரு பெரிய பிரச்சினை. இந்தக் கிழவியை எப்படி அப்புறப்படுத்துவது என்று யோசித்தார் அவர். ஒரு திட்டம் போட்டு அதன்படி கணவரை அழைத்தாள். அவனும் ஓடிவந்து நின்றான்.

"இதோ பாருங்கள் நீங்கள் உங்கள் அம்மாவை அழைத்துக் கொண்டுபோய் எங்கேயாவது நடுக்காட்டில் விட்டுவிட்டு வாருங்கள் அது தூன் நல்லது" என்றாள். சரி என்று இவனும் ஒத்துக் கொண்டான். வேறு விதமாக சொல்ல முடியாதே எங்கேயோ ஊருக்கு அழைத்துக்கொண்டு போவது போல் ஒரு ஏற்பாடு செய்துவிட்டான். இருவரும் கிளம்பினார்கள் இந்த மருமகள் இருவருக்கும் இரண்டு கட்டுச்சோறு மூட்டையைக் கட்டிக் கொடுத்தாள. கணவனுக்குக் கொடுத்த மூட்டைக்குள் பால் சோறு இருநதது. மாமியாருக்குக் கொடுத்த மூட்டைக்குள் களி மண் இருந்தது.

இது தெரியாமல் அவர்கள் அதை வாங்கிக் கொண்டு புறப்பட்டார்கள் நடுக்காட்டுக்கு வந்துவிட்டார்கள் அங்கே ஒரு குளம் இருந்தது. அவன் தாயைப்பார்த்து "நீ இங்கிருந்து சாப்பிடு நான் அங்கே அந்தப் பக்கமாகச் சென்று வருகிறேன்" என்று கூறிவிட்டு தவறுதலாக அம்மாவுக்கு கொடுத்த மூட்டையை எடுத்துக்கொண்டு கிளம்பி விட்டான் திரும்பி வரவே இல்லை.

இந்த வயதான அம்மா மகனைக் காணவில்லையே என்று அழஆரம்பித்துவிட்டார். அப்போது அந்தப் பக்கமாக ஒரு தெய்வ கன்னிகை நீராட வந்தாள். "ஏன் அழுகிறாய் என்று இவரைக் கேட்டாள் இவர் விஷயத்தைக் கூறினார். சரி கவலைப்படாதே என்று ஆறுதல் கூறினாள் தெய்வ கன்னிகை.

கட்டுச் சோற்று மூட்டையைப் பிரித்து இருவருமாக சாப்பிட்டார்கள் அந்த தெய்வ கண்ணிகைக்கு மிகவும் சந்தோஷம். உடனே அந்த அம்மாவுக்கு ஒரு வரம் கொடுத்தாள். அந்த வயதான அம்மா ஒரு இளம்மங்கையாக மாறிவிட்டார். நிறைய நகை உடையெல்லாம் கொடுத்து வீட்டுக்குப் போகும் வழியையும் காட்டினாள் உடனே இவர் வீட்டுக்கு வந்து நடந்த விஷயத்தைச் சொன்னார்.

மகனுக்கு உண்மையாகவே உள்ளுக்குள் சந்தோஷம். மருமகளுக்கு ஏகக்கடுப்பு,பொறாமை உடனே அவள் யோசித்துப் பார்த்தாள் அவளது மூளை இப்படிவேலை செய்ய ஆரம்பித்தது. "களி மண்மூட்டையைக்கொடுத்தனுப்பினால் கிழவியைக் குமரியாக மாற்றிவிடலாம். போலிருக்கிறதே நமது அம்மாவையும் அதே மாதிரி செய்தார். மருமகனும் அவனது மாமியாரும் இப்போது காட்டுக்குப் போகிறார்கள்.

அந்த அம்மா கையில் களிமண்மூட்டை பழைய மாதிரியே இவன் அவரை குளக்கரையில் விட்டுவிட்டு வந்து விட்டான். இந்த முறை மூட்டைமாறவில்லை இவன் வந்து தூரத்தில் மறைந்து நின்று கொண்டான். தெய்வகன்னிகை வந்தாள். இவர் சாப்பிட அழைத்தார். இருவரும் அமர்ந்து மூட்டையை பிரித்தாள. உள்ளே களிமண் தெய்வ கன்னிகைக்கு கோபம் வந்து விட்டது. உடனே "நீ கழுதையாகப் போகக் கடவது" என்று சாபமளித்தாள்.

உடனே அந்த அம்மா எழுந்து நின்றார் கால் கழுதைக் கால் மாதிரி மாறியிருந்தது. அவர் வீட்டுக்கு வரவரஉடம்பும் கொஞ்சம் கொஞ்சமாக மாறிவிட்டது. வீட்டுவாசலில் கழுதையின் சத்தம் கேட்டு மனைவி வெளியே ஓடி வந்து பார்தாள். கணவன் ஒரு புறம் கழுதை ஒருபுறம் நின்று கொண்டிருந்தனர். "என்ன நடந்தது?" என்று விசாரித்தாள் மனைவி. அதற்கு அவன் "வரவர மாமியார் கழுதை மாதிரி ஆகிவிட்டார் என்றான்.

அதுவே ஒரு பழமொழியாகி நிலைத்துப் போய்விட்டது. இப்போது இந்தப் பழமொழி இருக்கிறது. ஆனால் இது போல் யாரும் செய்வதில்லை.

இந்தக் காலத்துப் பையன் ஒருவனிடம் கேட்டேன் "நீயாக இருந்தால் அந்த நிலையில் என்ன செய்வாய்?" என்று அவன் சற்று முற்றும் பார்த்துவிட்டு மெதுவாக என் காதருகே வந்து "நானாக இருந்தால் களி மண் மூட்டையை என் மனைவியிடமே கொடுத்தனுப்பியிருப்பேன்" என்றான்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# பல இலட்சம் மக்களை ஒன்றுதிரட்டி அரசுக்கு எதிராக பாரிய போராட்டம்

## இரு மாதங்களில் கொழும்பில் நடாத்தப்படுமென்கிறார் ரணில்

(கொழும்பு)

அடுத்த மேதினத்தில் நாட்டில் புதிய அரசாங்கம் ஒன்று ஆட்சியில் இருக்குமென ஐக்கியதேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு நகர சபை மண்டபத்தில் நடைபெற்ற மேதின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசாங்கம் சுனாமியின் பின்னர் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனைத்து உதவிகளையும் தருவதாக உறுதியளித்திருந்தது.

உயிரைத்தவிர ஏனைய அனைத்து உதவிகளையும் தாம் செய்வதற்கு தயார் என ஜே.வி.பியினர் தெரிவித்திருந்திருந்தனர்.

எனினும் ,சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்தவிதமான உதவிகளும் செய்யப்படவில்லை என்பதனை உலகமேஅறிந்துள்ளது.அந்த மக்களின் உரிமைகள் முழுமையாக மீறப்பட்டுள்ளன.

தமக்கு வீடுகள் கட்டித் தரப்படும் என்ற நம்பிக்கையில் அவர்கள் தற்காலிக கொட்டில்களிலேயே தங்கியுள்ளனர்.



நாட்டில் சமாதானம் மீதான நம்பிக்கை குறைந்து கொண்டே வருகின்றது. போர் ஏற்படும் என்ற அச்சம் பரவலாக ஏற்பட்டுள்ளது. ஜே.வி.பியின் செயல்களுக்கு ஜனாதிபதி இணங்கிச்செல்வதே இதற்கு முழுமையான காரணமாகும்.

ஜே.வி.பியின் கடந்த காலவரலாறுகள் அனைவருக்கும் தெரியும். நாட்டைக் காப்பாற்றுவது மீளக் கட்டியெழுப்புவது குறித்து பேசும் அவர்களின் பேச்சு புதுமையானதாகவே உள்ளது.

இன்னும் இரண்டுமாதங்களில் பல இலட்சம் மக்களை கொழும்பில் திரட்டி அரசாங்கத்திற்கு எதிராகப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் எனவும் ரணில் விக்கிரமசிங்க அங்கு தெரிவித்தார்.(ற-4)

# பழ. நெடுமாறன் உள்ளிட்ட 6 பேர் மீதான பொடா வழக்கை இரத்துச் செய்யுமாறு தமிழக அரசுக்கு நீதிமன்றம் உத்தரவு

(புதுடில்லி)

தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன், மற்றும் தமிழர் தேசிய இயக்கத்தைச் சேர்ந்த 6பேர் மீது நீதிமன்றில் தமிழக அரசு கொடுத்த பொடா வழக்கினை இரத்துச் செய்யவேண்டும் என பொடா மீளாய்வுக்குழு தமிழக அரசுக்கு நேற்றுமுன்தினம் உத்தரவிட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதராவாக உரையாற்றினார்கள் எனக் குற்றம்சாட்டப்பட்டு தமிழக அரசினால் தமிழர் தேசிய இயக்கத்தலைவர் பழ.நெடுமாறன், பொதுச்செயலர் பேராசிரியர் சு.ப. வீரபாண்டியன், பாவானந், மருத்துவர் தாயப்பன், சாக்கோஹமீட் மற்றும் பரந்தாமன் ஆகியோர் கைது செய்யப்பட்டு ஓராண்டுக்கு மேலாக சிறைவைக்கப்பட்டிருந்தனர்.

பின்னர் இவர்களை சென்னை உயர் நீதிமன்றம் பிணையில் செல்ல அனுமதித்தது. இதனை அடுத்து பொடா மீளாய்வுக்குழுவிடம் தம்மீது தொடுக்கப்பட்ட வழக்கிற்கு எதிராக மனுவொன்றினை இவர்கள் தாக்கல் செய்திருந்தனர்.

இதனை ஆய்வு செய்த பொடா மீளாய்வுக் குழு இவர்கள மீது எவ்வித ஆதாரமும் இல்லாமல் வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளதானால் அதனை இரத்துச் செய்யும்படி தமிழக அரசுக்கு உத்தர விட்டுள்ளது.

தமழக அரசு பொடா நீதிமன்றில் அவர்கள் மீது தொடுக்கப்பட்ட வழக்கை இரத்துச்செய்யுமாறு மனுச் செய்யவேண்டும்.

அம்மனுவை நீதிமன்றம் ஏற்று அவர்கள் மீதான குற்றச்சாட்டை விலக்கிக் கொள்ள வேண்டும் என பொடா மீளாய்வுக்குழு தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளது.(ற-4)

# அடுத்த மாதத்திற்குள் 141 பட்டதாரிகளுக்கு தனியார் துறைகளில் வேலைவாய்ப்பு

(கொழும்பு)

அடுத்த மாதத்திற்குள் மேலும் 141 பட்டதாரிகளுக்கு தனியார் துறையில் வேலைவாய்ப்புப்பெற்றுக் கொடுக்கப்படவுள்ளது.

இதற்குத்தேவையான நடவடிக்கைகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தருண,அருண திட்டத்தின் நிறைவேற்றுப்பணிப்பாளர் தெரிவித்தார்.

தனியார் துறையில் வேலைவாய்ப்புப்பெற்றுக் கொடுக்கும் திட்டத்தின் இரண்டாவது கட்டத்தின் கீழ் இவ்வாண்டுக்குள் 2ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

வேலைவாய்ப்புக்காகத் தம்மைப்பதிவு செய்துள்ள பட்டதாரிகளின் எண்ணிக்கை 2ஆயிரத்து 200ஐ எட்டியிருக்கின்றது.

தருண,அருண திட்டத்தின் இரண்டாவது திட்டத்தில் 5ஆண்டுக்குள் 10ஆயிரம் பட்டதாரிகளுக்கு தனியார் துறையில் வேலை வாய்ப்புக்கள் பெற்றுக்கொடுக்கப்படவிருப்பதாக ஆற்றல், அபிவிருத்தி மற்றும்தொழிற்பயிற்சி அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்தத்திட்டத்திற்கு உலக வங்கியின் உதவி பெற்றுக்கொடுக்கப்படும். தெரிவு செய்யப்படும் ஒவ்வொரு பட்டதாரிகளுக்கும் தொழிற்பயிற்சிக்காக 35ஆயிரம் ரூபா ஒதுக்கப்படவிருக்கின்றது எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-4)

# வீரவேங்கை காவேரி வெற்றிக் கிண்ணத்தை பரு.ஐக்கிய விளையாட்டுக்கழகம் வென்றது

(அல்வாய்)

வட அல்வை இளங்கோ விளையாட்டுக் கழகம் நடாத்திய வீரவேங்கை காவேரி ஞாபகார்த்த வெற்றிக் கிண்ண மின்னொளியிலான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி கடந்த மாதம் 30ஆம் திகதி கழக மைதானத்தில் மிகவும் சிறப்பாக நடைபெறறது.

முன்னதாக நடை பெற்ற காட்சிப் போட்டியில் பங்குபற்றிய வதிரி பொமேஸ் விளையாட்டுக்கழகம் அல்வாய் நக்கீரன் விளையாட்டுக்கழகத்தை 33:16 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி கொண்டது.

மூன்றாம் இடத்திற்கான போட்டியில் கூவில் தீபஜோதி விளையாட்டுக் கழகத்தினர் வரணி மதிஒளி விளையாட்டுக்கழகத்தினரை 26:13 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிகொண்டு மூன்றாம் இடத்தைப் பெற்றனர்.

இறுதிப்போட்டியில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகமும் பருத்தித்துறை சென்தோமஸ் விளையாட்டுக்கழகமும் மோதின.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப் போட்டியின் முதல் சுற்றில் 10:6 என்ற புள்ளிகளின அடிப்படையில் பருத்தித்துறை. சென் தோமஸ் விளையாட்டுக்கழகத்தினர் முன்னிலையில் திகழ்ந்தனர் இரண்டாவது, மூன்றாவது, நான்காவது சுற்றுகளில் 9:7 ,9:8, 10:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தினர் வெற்றியை தமது பக்கம் திருப்பி இறுதியில் 34:31 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்று வீரவேங்கை காவேரி ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்தையும் நாலரை அடி உயரமான சுற்றுக் கிண்ணத்தையும் தம தாக்கிக்கொண்டனர்

இச்சுற்றுக் கிண்ணத்தை கடந்த வருடம் யாழ்ப்பாணம் பமிலியன்ஸ் விளையாட்டுக்கழகத்தினர் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இச்சுற்றுப்போட்டியின் தொடர் ஆட்ட நாயகியாகவும், இறுதிப்போட்டியின் ஆட்ட நாயகியாகவும், சென்தோமஸ் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த செல்வி இ. அகல்யா தெரிவு செய்யப்பட்டார். இவற்றை விட முதல் மூன்று இடங்களையும் பெற்ற விளையாட்டுக்கழகங்களுக்கு பணப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

இதேவேளை, வடமராட்சியில் முதல்முதலாக ஆண், பெண் கலப்பு அணியினர் பங்குபற்றிய காட்சிப் போட்டி ஒன்று இடம்பெற்றது. இதில் கலப்பு ஏ அணியினர் கலப்பு பி அணியினரை 13:10 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி கொண்டனர். (ற-7)

## பாண்ட்போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மட்டத்தில் தமிழீழ மாணவர் அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பாண்ட வாத்தியப் போட்டிகள் நாளை முதல் கோட்ட ரீதியில் இடம்பெறும் என தமிழீழ மாணவர் அமைப்பு அறிவித்துள்ளது. (ற-7)

# மீள்பார்வை

## பிறியானி விஜேசேகர எழுதிய

# இலங்கையில் பாராளுமன்ற வழக்கம்

(தமிழாக்கம் : ஆர்.எஸ். வேதநாயகம்) 57



8) நிகழ்ச்சித்திட்டத்தின் எந்தவொரு கருத்திட்டத்தின் அல்லது செலவுவிடயத்தின் தொகைக்குறைப்பிற்கான அல்லது நீக்கத்திற்கான பிரேரணை எதுவும் இல்லாதவிடத்து அல்லது அத்தகைய பிரேரணைகள் அனைத்தும் முடிவாக்கப்பட்டவிடத்து அக்கிராசனத்திலிருந்து "................. நிகழ்ச்சித்திட்டத்திற்கான தொகையான ரூபா............(அல்லது...............நிகழ்ச்சித்திட்டத்தில் குறைக்கப்பட்ட தொகையான ரூபா..............) …ணையில் சேர்க்கப்படுமாக" எனும் பிரேரணை சபைக்கு விடப்படும். அப்பிரேரணை …க்கிராசனத்திலிருந்து சபைக்குவிடப்பட்டபின் அந்நிகழ்ச்சித்திட்டத்திலுள்ள தனிப்பட்ட கருத்…டங்கள் அல்லது செலவுவிடயங்கள் மீது மேலும் விவாதிக்க அனுமதிக்கப்படலாகாது.

9) 24 ஆம் நிலையியற் கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ளவை எவ்வாறிருப்பினும் எந்தவொரு …கழ்ச்சித்திட்டம் கருத்திட்டம் அல்லது செலவுவிடயத்திற்கான தொகைக் குறைப்பிற்கும் முன்னறி…த்தல் தேவைப்படும்.

*மிகைச் செலவுகள்*

132. 1) இக்கட்டளையின் 5)ஆம் பந்தியில் வகுத்துக்காட்டப்பட்டுள்ள சூழ்நிலைகளைத் தவிர்ந்து ஏற்கனவே முடிவுற்ற நிதியாண்டின் சேவை…ப் பணம் வழங்குவது பற்றிய (இதன் பின்னர் மிகைச் செலவு எனப்படும்) பிரேரணை எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

2) ஒரு நிகழ்ச்சித்திட்டத்தின் எந்தவொரு கருத்திட்டத்தின் மீது மிகைச் செலவு எதையும் பரிசோதித்து அம் மிகைச்செலவு அந்நிகழ்ச்சித்திட்டத்தின் மீதா அல்லது அந்த நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு கருத்திட்டத்தின் மீது மாத்திரமா அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கருத்திட்டங்களின் மீதா எனத் தமது அறிக்கையில் தெரிவிக்க வேண்டுமென்பது அரசாங்கக் கணக்குக் குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தலாகும்.

3)ஒன்று அல்லது ஒன்றுக்குமேற்பட்ட கருத்திட்டங்கள் மீது மட்டுமே மிகைச் செலவுகள் ஏற்பட்டிருப்பின் மிகைச் செலவுகள் முறையான அதிகாரத்துடன் செய்யப்பட்டனவா எனவும் சிக்கனம் சரியாகக் கையாளப்பட்டதா எனவும் குழு விசாரித்து அவை பற்றித்திருப்தியடைந்தால் அவ்வாறு அறிக்கையிடவேண்டும் அத்தகைய மிகைச் செலவுக்கு மேற்கொண்டு அங்கீகாரம் பெறத்தேவையில்லை.

எனினும் ஆட்களுக்குரிய வேதனாதிகள் கருத்திட்டம் எதன் மீதிலும் மிகைச் செலவு எவையாயினும் செய்யப்பட்டிருப்பின் அவ்வாறு செய்யப்பட்ட செலவு அப்போது நடைமுறையிலுள்ள சம்பள அளவுத்திட்டங்களின் படி செய்யப்பட்டுள்ளனவென்றும் தனி ஒருவருக்கு நன்மை பயக்கக்கூடிய வகையில் செய்யப்படவில்லை என்றும் குழு திருப்தியடைதல் வேண்டும். அவ்வாறு திருப்தியடைந்தால் அப்படியே அறிக்கையிடல் வேண்டும்.

4) அரசாங்க கணக்குக்குழு அவ்வாறு திருப்தியடையாவிடின் தான் சரி எனக் கருதும் வகையில் மிகைச் செலவு அல்லது மிகைச்செலவில் இவ்வாளவு தொகை அனுமதிக்கப்படவில்லை என அறிக்கையிடலாம்.

5) ஒரு நிகழ்ச்சித் திட்டத்தில் மிகைச் செலவு ஏற்பட்டிருப்பதாகவோ செலவுக்கான சில வியடங்களைத் தாம் அனுமதிக்கவில்லை என்பதாகவோ அரசாங்கக் க்ணக்குக் குழு அறிக்கையிடும்பட்சத்தில் அம்மிகைச்செலவை அல்லது அனுமதிக்கப்படாத சில விடயங்கள் மீதான செலவை ஈடுசெய்யும் பொருட்டு பரிசீலணை செய்யும் வகையில் பாராளுமன்றத்தை ஒரு குழுவாகக் கூட்டுவதற்குத் தீர்மானிக்கும் தீர்மானம் ஒன்று நிதியமைச்சரால் நிர்ணயிக்கப்படும் ஒரு தேதியில் பரிசீலிக்கப்படுவதற்காக ஒழுங்குப்பத்திரத்தில் இடம்பெறல்வேண்டும்.

எனினும் அத்தகைய பிரேரணையில் குறிப்பிடப்படும் மிகைச்செலவு எதுவும் எவ்வாண்டிற்குரியதோ அதையடுத்துவரும் ஆண்டிற்கு அடுத்த ஆண்டு டிசெம்பர் 31ஆம் தேதிக்குப் பின் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

6) முறையான அதிகாரம் பெறப்படாத செலவு எதையும் அது ஒரு மிகைச் செலவாக இருந்தாலென்ன இல்லாவிட்டாலென்ன அனுமதியாது விடுவதற்கு அரசாங்கக் கணக்குக் குழுவிற்குள்ள அதிகாரத்தை இக்கட்டளையில் குறிப்பிடப்படும் எதுவும் குறைக்காது. அவ்வாறு அனுமதியாது விடும் எதற்கும் இக்கட்டளையின் 5) ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள நடைமுறை பொருந்தும்.

132 அ. 1) எந்த நிதியாண்டிலும் ஆகக்கூடிய எல்லைகள் விஞ்சப்பட்டுள்ள அல்லது சட்டத்தால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஒரு முறையில் ஆகக் குறைந்த எல்லைகள் இணங்கியொழுகப்படாத (இதனகத்துப்பின்னர் முற்பணக் கணக்கு எல்லைகளுக்கு இணங்கியயொழுகாமை எனக் குறிப்பீடு செய்யப்படும்) முற்பணக்கணக்கு செயற்பாடு எதனதும் தொடர்பிலான பிரேரணையெதுவும் இக் கட்டளையின் 4) ஆம் பந்தியிற் தரப்பட்டுள்ள சூழ்நிலைகளில் தவிர ஏற்றுக் கவனிக்கப்படமாட்டாது.

132. 2) முற்பணக்கணக்குச் செயற்பாடு ஒன்றின் ஆகக்கூடிய எல்லைகள் விஞ்சப்படுகின்ற அல்லது முற்பணக்கணக்குச் செயற்பாடு ஒன்றின் ஆகக்குறைந்த எல்லையொன்று இணங்கியொழுகப் படாதிருக்கின்ற கணக்காய்வாளர் தலைமையதிபதி அறிக்கையிட்டுள்ள ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் பகிரங்கக் கணக்குக் குழு பரிசோதனை செய்யவேண்டுமென்று அக்குழுவுக்கு அறிவுறுத்தப்படுதல் வேண்டும். முற்பணக்கணக்குச் செயற்பாடு எல்லைகளுக்கு இணங்கியொழுகாமை சட்டத்திற்கு இணங்கவுள்ளதா என்பதைக் குழு தீர்மானித்தல் வேண்டும். அறிக்கை செய்யப்பட்ட முற்பணக் கணக்கு எல்லைகளுக்கு இணங்கியொழுகாமை அதிகாரமளிப்பதா அல்லவா என்பதைப் பகிரங்கக் கணக்குக் குழு தீர்மானித்தல் வேண்டும்.

132. கணக்காய்வாளர் தலைமையதிபதி பாராளுமன்றத்திற்குச் செய்யும் அறிக்கையில் அறிக்கையிடும் நட்டங்கள் எந்த நிதியாண்டுக்குரியனவோ அந்த நிதியாண்டு முடிவுறு முன்னர் அத்தகைய நட்டங்கள் முழுமையாகக் கொடுத்துத் தீர்க்கப்படாதவிடத்து முற்பணக் கணக்குச் செயற்பாடுகள் மீதான எவையேனும் அதிகாரம் பெறுத தொழிற்பாட்டுநட்டங்களைப் பகிரங்கக் கணக்குக் குழு பரிசோதனை செய்யவேண்டுமென்று அக்குழுவுக்கு அறிவுறுத்தப்படுதல்வேண்டும்.

4)முற்பணக் கணக்குச் செயற்பாடு எதனதும் மீதான எல்லைகளுடன் இணங்கியயொழுகாமை எதற்கும் அதிகாரமளிக்கப்படவேண்டுமா அல்லவா என்று பகிரங்க கணக்குக் குழு விதந்துரைத் திருக்கும் போதெல்லாம் அல்லது முற்பணக் கணக்குச் செயற்பாடு எதனதும் மீதான அதிகாரம் பெறத நட்டங்களுக்கு அதிகாரமளிக்கப்படவேண்டுமா அல்லவா என்று குழு விதந்துரைத்திருக்கும் போது அத்தகைய விதப்புரைகளைப் பரிசீலிக்கும் பொருட்டுப் பாராளுமன்றம் குழுவொன்றாக அமைத்தல் வேண்டும். என்று தீர்மானிப்பதற்கான பிரேரணை ஒன்றை நிதி என்ற விடயத்திற்குப் பொறுப்பாயிருக்கும் அமைச்சர் நாம் நிர்ணயிக்கும் ஒருதேதியில் பரிசீலிப்பதற்கென ஒழுங்குப்பத்திரத்தில் இடலாம்.

(தொடரும்)

# வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் 20 இலட்சம் வரை அதிகரிக்கப்படும்

## -அமைச்சர் அதாவுட செனவிரத்ன

(கொழும்பு)

அடுத்த இரண்டு ஆண்டுகளில் இளைஞர்களுக்கான வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களை 20 இலட்சம் வரை அதிகரிக்கப் போவதாக வெளிநாட்டுவேலைவாய்ப்பு அமைச்சர் அதாவுட செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

கொரியாவில் வேலை வாய்ப்புப் பெற்று புறப்படும் 17 ஆவது குழுவின் 157 பேருக்கு பயணச்சீட்டு விசா அனுமதிப் பத்திரங்களை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத்தெரிவித்தார்.இவ்வைபவம் நேற்று முன்தினம் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் நடந்தது.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர்,கடல் கடந்து செல்லும் இலங்கைத்தொழிலாளர்களுக்கு 5 சதவீத குறைந்த வட்டிக்கடனுடன் பத்து இலட்சம் ரூபா வரையிலான வீடமைப்புக் கடன் பெற்றுத்தரப் படும் எனத் தெரிவித்தார்.

வெளிநாடுகளில் சிறைவாசம் அனுபவிக்கும் இலங்கையர்களை தாயகம் அழைத்துவருவது குறித்த தான கைதிகள் பரிமாற்றத் திட்டம் பற்றி பல நாடுகளுடனும் பேச்சுவார்த்தை நடாத்தி வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ற-4)

# தரம் 5 மாணவர்களுக்கான இலவச வழிகாட்டல் கருத்தரங்கு

(துன்னாலை)

தரம் 5இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை இலவச வழிகாட்டல் கருத்தரங்கு ஒன்றினை கரவெட்டி மகேசன் விளையாட்டுக்கழகம் ஒழுங்கு செய்துள்ளது.

கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் பிரதி ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணிவரை இக் கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.

வடமராட்சியின் முன்னணி ஆசிரியர்கள் இக்கருத்தரங்குகளை நடத்தவுள்ளதுடன் மாணவர்களுக்கு இலவச அச்சடித்த குறிப்புக்களும் வழங்கப்படவுள்ளதாக விளையாட்டுக் கழகச் செயலாளர் வே. ராஜதீபன் தெரிவித்தார்.

இக்கருத்தரங்கின் அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த சனிக்கிழமை கழகத் தலைவர் க. பிரதீப் தலைமையில் பாடசாலை அதிபர் இ.ராகவனால் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மேற்படி கருத்தரங்கில் தரம் 5 இல் கல்வி கற்கும் மாணவர்களை கலந்துகொண்டு பயன்பெறலாம் என பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார். (ற-7,101)

# அனுமதியின்றி சாராய விற்பனை; இருவருக்கு ரூ.20 ஆயிரம் அபராதம்

(துன்னாலை)

அனுமதிப்பத்திரமின்றி சாராயம் விற்ற இருவருக்கு பருத்தித்துறை நீதிமன்றம் 20 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

மேற்படி குற்றச்சாட்டின் பேரில் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த நபர் ஒருவர் மீதும் தொண்டமானாறைச் சேர்ந்த பெண் ஒருவர் மீதும் மதுவரித் திணைக்களத்தால் பருத்தித்துறை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

பிரஸ்தாப இருவரும் கடந்த வியாழக்கிழமை மாவட்ட நீதிபதி க.அரியநாயகம் முன்னிலையில் ஆஜா செய்யப்பட்டபோது இருவரும் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து இருவருக்கும் தலா 10 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது. (ற-101)

# வாகன விபத்தில் படுகாயமடைந்த சிறுவன் விமானப்படை விமானம் மூலம் கொழும்புக்கு!

(யாழ்ப்பாணம்)

வாகன விபத்தொன்றில் படுகாயமடைந்த பாடசாலை மாணவன் ஒருவன் யாழ்போதனா வைத்திய சாலையிலிருந்து மேலதிக சிகிச்சைக்காக விமானப்படையின் விமானம் மூலம் கொழும்பு வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளான்.

முல்லைத்தீவு பதன் வயல் முள்ளியவளையைச் சேர்ந்த கிருஷ்ண பிள்ளை சேகர் (வயது14) எனும் பாடசாலை மாணவனே இவ்வாறு மேலதிக சிகிச்சைக்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டவராவார்.

மேற்படி விபத்துச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,

கடந்த 29ஆம் திகதி பிற்பகல் பிரஸ்தாப சிறுவன் தனது பிரதேசத்திலுள்ள ஆலயமொன்றுக்குச் சென்று விட்டு வீதியால் துவிச்சக்கரவண்டியில் வந்து கொண்டிருந்தவேளை, கருங்கல் ஏற்றி வந்த ஹண்டர் வாகனமொன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியதில் சிறுவன் தலையில் படுகாயமடைந்தார்.

இதனையடுத்து சிறுவன் உடனடியாக கிளிநொச்சி வைத்திய சாலைக்கு எடுத்துச்செல்லப் பட்ட போதும் அன்றையதினம் இரவு மேலதிக சிகிச்சைக்காக போதான வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டான்.

அதன்பின் ,சிறுவன் இரு நாட்கள் யாழ். போதான வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றபோதும், அவரின் நிலைமை மிகவும் மோசமாக இருந்ததனால் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசியவைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்பதனால் சிறுவனை விமானம் மூலம் கொழும்புக்கு எடுத்துச் செல்வது சம்பந்தமாக யாழ் பாதுகாப்பு தலைமையகத்தளபதி மேஜர் ஜெனரல் எஸ். டீ. தென்னக்கோனிடம் யாழ். போதான வைத்தியசாலைப் பணிப்பாளர் ரவிராஜ்சினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

அவ்வேண்டுகோளுக்கமைய தேவையான விமானப்பயண ஒழுங்குகள் யாழ். பாதுாப்புத் தளபதியினால் செய்துகொடுக்கப்பட்டன. சிறுவனும் அவனது உறவினர்களுடன், வைத்தியர்களும் நேற்று முன்தினம் காலை 11.50 மணியளவில் விமானப் படையினின் விமான மூலம் கொழும்புக்கு அனுப்பப்பட்டனர். (ற)

# ஆசிரிய நியமனத்துக்கான போட்டிப் பரீட்சை விரைவில்!

(கொழும்பு)

அரச திணைக்களங்களில் தற்போது இணைக்கப்பட்டுள்ள பட்டதாரிப்பயிலுநர்களுக்கு நிரந்தர ஆசிரிய நியமனங்களை வழங்குவதற்கான போட்டிப்பரீட்சைகள் இம்மாதத்தில் நடாத்தப்பட விருப்பதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் டபிள்யூ. ஏ. எம். விஜயசிறி தொிவித்துள்ளார்.

தேசிய பாடசாலைகளிலும் மாகாண கல்வியமைச்சின் கீழ் இயங்கும் பாடசாலைகளிலும் தற்போது நிலவும் ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்காகவும் இந்தப் போட்டிப் பரீட்சை நடாத்தப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார். (ற-4)

# இணுவில் பொது நூலகத்தின் செயற்பாடுகள்

# ஒரு நோக்கு

வாழ்வின் அடிப்படையாக இருப்பது ஆத்மீகம். அது உளத்திற்கு மன மகிழ்ச்சியையும், உலக வாழ்விற்குரிய அனுபவத்தையும் அளிக்கிறது. அந்தவகையில் இந்நூலகம் நம் முன்னோரின் முயற்சியால் ஆலயத்திற்கு அருகாமையில் ஆரம்பிக்கப்பட்டு காலத்திற்குக் காலம் தன் செயற்பாடுகளை பன்முகப்படுததி விரிவாக்கி இன்று இணுவிலின் பொது நூலகமாக மட்டுமன்றி அயற் கிராமங்களுக்கும் ஓா் பொதுநூலகமாக திகழ்கின்றது.

யாழ்.மாவட்டத்தில கிராமங்கள் தோறும் சனசமூக நிலையங்கள் பல எண்ணிக்கையில் உள்ளன. அவை பத்திரிகை வாசிப்பு, பாலாபாடசாலை போன்ற ஓரிரு சேவைகளுடன் தம் செயற பாடுகளை வரையறுத்துக்கொள்கினறன. இதனால் இவை பொதுவாக "வாசிகசாலைகள்" என்று செயற்பாட்டிற்கு அமைவாக அழைக்கப்படுவதுண்டு. விரல் விட்டு எண்ணக்கூடிய சில சனசமூகநிலையங்கள் கால ஓட்டத்துடன் இணைந்து மக்கள் சேவையில் உயிர்த்துடிப்புடன் செயற்படடுக்கொண்டிருக்கினறன. இவற்றில் ஒன்றாக இணுவில பொது நூலகம் திகழ்கின்றது.


இதன் வளர்ச்சிக்குப் பல முன்னோாகள் காரண்மாவார்கள. ஆனால் குறிப்பாக தறபோதைய வளர்ச்சிக்கு யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் கௌரவ போசகர் க.தேவராஜா மற்றும் கௌரவ இலண்டன் கிளை அமைப்பாளர் இ.சிவகுமார் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

மேலும் இந் நூலகமானது எமது செயற்குழுக் கூட்டத்தின் தீர்மானத்திற்கு அமைய அன்பர் இராசையா சிவகுமாா் (K.R.S) இலண்டனில் இருந்து தமது ஊராகிய இணுவிலுக்கு வநத போது அவருடன் தொடர்பு கொண்டு இந்நூலக அபிவிருத்தி தொடர்பான கடிதம் ஒன்றைக்கையளித்து இந்நூலக அபிவிருததிக்கு உதவக் கோரினோம்.

அதனடிப்படையில் இலண்டனில் அன்பா் கதிர்காமா்-மாணிக்கவாசகர், கலிங்கராஜா(சின்னமணி) -திலபன் ஆகியோா் க.சிவகுமாருடன் சேர்ந்து ஊர்ப்பற்று உளள அன்பர்களிடமிருந்து நிதி சேகரிக்க அன்ப்பினார்கள். பின் க.மணிக்கவாசகரும், இ.சிவகுமாரும் சுவிஸ் நாட்டுக்குச் சென்று இந்நூலகத்திற்கான காணியை வாங்கி எங்களுக்கு அந்த நல்ல செய்தியை அனுப்பியதோடு க.மாணிக்கவாசகர் நேரிலேவந்து உறுதியினை ஒழுங்குபடுத்திச் சென்றார்.

இப்பொது நூலகம் யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவரும் நூலக மூதவை உறுப்பினருமான க.தேவராஜாவால் திறந்துவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்நூலகததில் நூலக விஞ்ஞானப் பிரிவுக்கு எமது பிரிவில் வாழும் இளைஞர்களையும் யுவதிகளையும பயிற்சிக்கு அனுப்பியமை குறிப்பிடத்தக்கது.

பத்திரிகைகள் பல்வேறு சஞ்சிகைகள் மேலும் வாசகர்களின் விருப்பத்திற்கேற்ப தெரிந்து வாசிக்கக்கூடிய பரந்த ஒரு நிறைவான சேவையை இப்பகுதி வழங்கும். இப்பிரிவு சிறப்பாக இயங்குவதற்கு கொழும்புக்கிளை தனது பணியை செய்து வருகின்றது.



க.குமாரசாமியின் அனுசரணையுடன் இந்தியக் கலைஞர்களால் சரவஸவதி சிலை வடிவமைக்கப்பட்டுள்ளது.

இணுவில் பொது நூலகத்தில் பல செயற்பாட்டுத் துறைகள் இருந்த போதும் அவற்றுள சிலவற்றை உற்றுநோக்குவோம்.

* பத்திரிகை வாசிப்புப் பகுதி
* நூல் இரவல் கொடுக்கும் பகுதி
* நவீன சிறுவர் பாடசாலை (முன்பள்ளி)
* கணனிப் பிரிவு, விளையாட்டுத்துறை
* இலவச வகுப்புக்கள் சிரமதானம்
* கலை கலாசாரப்பிரிவு
* ஏனைய சமூக சேவைகள்

### பத்திரிகை வாசிப்பு

இத்துறையில் இந்நிலையம பல அபிவிருத்திகளை செய்ய இருக்கின்றது. அந்தவகையில் யாழ்.மத்திய கல்லூரி முறைசாரப் பிரிவும் யாழ்.பல்கலைககழகமும் இணைந்து செயற்படுத்தும்

### நூல் இரவல் வழங்கும் பகுதி

இவ் வசதியைப் பொதுமக்கள் கணிசமாகப் பயன்படுத்துவதற்கு ஏற்றவகையில் ஒழுங்குகள செய்யபபட்டுள்ளன. வாசகர்களின் தொகையை அதிகரிப்பதற்கும். அவர்களின் திருப்திக்குமான நூல்களை ஒழுங்குபடுத்தியுள்ளோம். நல்ல பல நூல்களை தங்களிடம் வைத்திருப்பவர்கள் இந்நூலகத்திற்கு வழங்குவதன் மூலம் அவற்றால் அடையும் பயன்பாட்டை அதிகரிப்பதுடன் ஆத்மதிருபதியையும் அடையலாம்.

ஞான.திருக்கேதீஸ்வரன்
இணுவில் பொது நூலக மூதவை உறுப்பினர்

### நவனமயமாக்கப்பட்ட சிறுவர் பாடசாலை (முன்பள்ளி)

பாடசாலை முன் கல்வியின் முக்கியத்துவம் அனைவராலும் உணரப்பட்ட இக்காலத்தில் பாலர் பாடசாலை சமூகக்கில் அவசியமாகிறது. நமது நாட்டின் எதிகாலத் தலைவர்களின் உருவாக்கம் இங்கேதான் ஆரம்பமாகின்றது.

எமது நிலையம் சமூகத்தின் தேவையறிந்து காலத்துக்குப் பொருத்தமான பாடவிதானத்தை அமைத்து மிகவும் சிறந்த முறையில் பாடசாலை முன் கல்வியை சிறார்களுக்கு மகிழ்விக்கும் வகையில நடத்துகின்றது. இது தொடர்பாக வருடாந்த விளையாட்டுப்போட்டி, சிறுவர் தின கலை நிகழ்ச்சிகள், சிறார்களது துடிபபுக்கள் நடிப்புக்களாகவும் ஆட்டங்களாகவும் நடத்தப்படுகின்றது. மேலும் எமது ஊரில் படித்த யுவதிகளை பாலா் பாடசாலை பயிற்சிக்கு அனுப்பி நவீன கற்றல் வசதிகளை மாணவர்களுக்கு வழங்கியுள்ளோம்.

### கணனிப் பிரிவு

இன்றைய உலகின் வேகத்திற்கேற்ப நாமும் வேகமாகச் செயற்பட வேண்டுட். அந்த வகையில், கணனிப்பிரிவினை ஆரம்பிக்க வேண்டும் என்ற செயற்குழுவின் அவா கௌரவ போசகர் க.தேவராஜாவால் நிறைவு பெற்றுள்ளது.

### விளையாட்டுத்துறை

இளைஞாகள் மற்றும் யுவதிகளிடம் மறைந்திருக்கின்ற திறமைகளை வெளிக்கொண்டு வரும் நோக்குடன் உள்ளக விளையாட்டு நிலையம் அமைக்கபபட்டுள்ளது. வெகுவிரைவில் துடுப்பாடடம், உதைபந்தாட்டம், வலைப்பந்து, கரப்பந்து போன்ற விளையாட்டுக்களை விளையாடுவதற்கு ஏற்ற வகையில், எமது நூலகத்திற்கு அண்மையில் உள்ள காணியை வாங்க இருக்கின்றோம்.

### இலவச வகுப்புக்கள்

நமது நாட்டில் இலவசக்கல்வி முறை இருந்தும் பல்வேறு சமூக, பொருளாதார, அரசியல் காரணங்களினால் அது நிறைவற்றுக் காணப்படுகின்றது. நாட்டில் உயர்ந்த செலவும் விலைவாசியும், வளம் உள்ளவனையும் வறியவனாக்கி விடுகின்றன. இந்நிலையில் மாணவர்களின் நலன்கருதி ஓய்வுநேர வகுப்புக்கள் நடத்தப்பட இருக்கின்றன. இவ் வகுப்பினை எமது நூலக சமூகநாட்டம் உள்ள உறுப்பினர்கள் மனமுவந்துசெயய இருப்பது மனதாரப் பாராட்டவேண்டியதே.

மேலும், ஆண்டு ஐந்திற்கான புலமைப்பரிசில் வகுப்பு, க.பொ. தசாதாரண, உயர்தர மாணவர்களுக்கு அவர்களது பாடத்திட்டத்திற்கு அமைய இலவச கருத்தரங்குகளை நடத்துவதறகும் சமய, சமூக, கலை, கலாசார, சுகாதார மேம்பாட்டைப் பெருக்கும் நோக்குடன் கருத்தரங்குகளை நடாததக்கூடிய வகையிலும் கலாசார மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இதற்கான காணியைக் கனடாக்கிளை வாங்கித்தந்தமை குறிப்பிடத்தக்கது. இக்கலாசார மண்டபம் க.சிவகுமாரின் முழு முயற்சியினால் கட்டிமுடிக்கப்பட்டமையும் இங்கு குறிபபிடத்தக்கது. மேலும் இக்கட்டடமகட்ட கே.ஆர்.எஸ். நிறுவன உரிமையாளர் க.சிவலோகநாதன் பணம் தந்து உதவியதோடு இக்கட்டடம் அவரால் திறந்துவைக்கப்பட்டது.

### சிறுவர் பூங்கா

எமது கிராமத்திலுள்ள சிறுவர்கள் தமது பொழுதுபோக்கைப் பயனுள்ளதாக ஆக்குவதற்கு அமரர் த.இராசரத்தினம் ஞாபகார்த்தமாக மிட்டத்தட்ட மூன்றரை இலட்சம் ருபா செலவில் நவீன வசதிகளுடன் GEN ROM WELDING WORKS COLOMBO எனும் நிறுவத்தினால் சிறுவர் பூங்கா வடிவமைக்கப்பட்டுள்ளது.

இச் சிறுவர் பூங்கா தீபாவளி தினத்தன்று பிற்பகல் 3.30மணியளவில் திருமதி. லீ.இராசரத்தினத்தால் திறந்துவைக்கப்படவுள்ளது.

நாட்டின் அவசிய தேவைகள பலவற்றுக்கெல்லாம் அறைகூவல வரும்போது அலுக்காது சளைக்காது அவாவுடன் ஓடிச் சென்று நமது உறுப்பினர்கள் அரும் பணிகளை ஆற்றியுள்ளனர். இப்பணிகள அன்னதானம் சிரமதானம், இரத்ததானம் என்று நீண்டு செல்கின்றது.

இவ்வாறு சமூக, பொருளாதார, கலை, பண்பாடு, வளர்ச்சிக்காக எமது நிலையம் ஆற்றுகின்ற பணிகள் நாட்டில் நல்லாறாக என்றும் சலசலத்து கலகலத்து ஓடட்டும். அதை நாடி நல்மக்கள் ை நீளட டும்!

# உண்மைக் குரல்களை அழிப்பதன் மூலம் தமிழர் அபிலாஷைகளை அழித்துவிட முடியாது

கொழும்பில், நன்கு பாதுகாப்புகுப்ப்ட இடத்தில பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக வைத்து கடத்தப்ப்ட மூத்த தமிழ் ஊடகவியலாளர் தராக்கி என்று அழைக்கப்பட்ட தருமரட்ணம் சிவராம் படுகொலை செய்யப்பட்டமையை கனடா தமிழ் ஊடகவியலாளர் இணையம் வனமையாகக் கண்டித்துள்ளது.

சிவராம் கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக அரச படைகளின் நேரடி மறைமுக அசசுறுத்தலுக்கும் உயிர்க்கொலை முயற்சிக்கும் முகம் கொடுததே வந்துள்ளார். எனினும் தமிழ் தேசியத்தினபால கொண்ட உறுதியான பற்றினாலும், தமிழ் மக்கள் அவர்களின் அரசியல் அபிலாசைகளை வென்றெடுக்க வேண்டும் என்ற வேட்கையிலும் துணிந்து தொடர்ச்சியாக தமிழா் கருத்துகளை ஊடகவியலாளராக வெளிக்கொணர்ந்தவர்.

இந்தவகையில் இவரது படுகொலையின் பின்னணியில் கொழும்பு ஆளும் வர்க்கத்தின் இரும்புக்கரம் உண்டு என்பதை கனடாத் தமிழ் ஊடகவியலாளர்கள் இணையம் உறுதியாக நம்புகிறது.

இலங்கைத்தீவில் தொடரும் இனப்பிரச்சினையில் தமிழ் ஊடகவியலாளர்களே தொடர்ந்தும் எதிர்த்தரப்பால் படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டுவருகின்றனர் என்ற உண்மையையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

சிறிலங்கா அரசும், அதன் படைகளுமே தமிழ் ஊடகவியலாளர்களின் கொலைக்குத் தொடா்ந்தும் பின்னணியில் இருக்கும் நிலையில், இலங்கைத் தீவில் உள்ள தமிழ் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை உறுதிசெய்யுமாறு எமது கனடிய அரசிடமும் சர்வதேச அரசுகளிடமும் சர்வதேச ஊடகவியலாளர் காப்பு அமைப்புக்களிடம் கனடியத் தமிழ் ஊடகவியலாளர் இணையம் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளது.

நிமலராஜன், நடேசன், சிவராம போன்ற உண்மையின் குரல்களை அழித்து விடுவதன் மூலம் ஈழத்தமிழர் அபிலாசைகளை அழித்துவிட முடியாது என்பதை சிறிலங்கா அரசிற்குக கூறுவதோடு, உங்கள் பணியை முனைப்புடன் தொடா்வோம் என அநியாயமாக அழிக்கப்பட்டுவிட்ட எமது ஊடகவியலாளா் உறவுகளுக்கு கனடியத் தமிழ் ஊடகவியலாளர் இணையம் உறுதி கூறுகின்றது என இதுவிடயம் தொடர்பில் இணையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்படுகிறது. (ற-4)

## துப்பாக்கிச்சூடு ஒருவர் காயம்

பொலநறுவை வெலிக்கந்தையில் நேற்று முன்தினம் காலை இனந்தெரியாத நபர்கள் மேறகொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார். வெலிக்கந்தை குடாபோக்குண என்னும் இடத்தில் நேற்று முன்தினம் காலை தந்தை மற்றும் மகன் ஆகிய இருவர் மீதும் இனந்தெரியாத சிலா் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் தந்தையார் காயமடைந்துள்ளார். இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொள்ள ஐவர் வந்ததாகவும் அவர்களில் இருவரின் கைகளில் துப்பாக்கி இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-4)

# மென்பந்து துடுப்பாட்டம், உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி சனியன்று

(யாழ்ப்பாணம்)

வடமாகாண மதுவரி உத்தியோகத்தர் விளையாட்டுக்கழகத்தினால் திணைக்களங்களுக்கிடையில் நடாத்தப்பட்ட மென்பந்து துடுப்பாட்டம், உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிகளின் இறுதிப்போட்டி எதிர்வரும் 7ஆம் திகதி சனிககிழமை அரியாலை சனசமூகநிலைய மைதானத்தில் பிற்பகல் 1.00மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு பருத்தித்துறை மதுவரித் திணைக்களத்தின் மதுவரி பிரதான பரிசோதகர் எஸ்.செந்தூர்ச்செல்வன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இநநிகழ்விற்கு பிரதம விருந்தினராக மனுவரி ஆணையாளா நாயகம் பராக்கிரம எக்கநாயக்க பண்டாரவும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட அரச அதிபா் கே.கணேஷ், மதுவரி பிரதி ஆணையாளர் கப்பு ஆராச்சி, மதுவரித் திணைக களத்தின் பதில் ஆணையாளர் எஸ்.சிவானந்தன், யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிபபாளர் வைத்திய கலாநிதி ரவிராஜ், யாழ்.மாவட்ட விளையாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் றொகான் ராஜசிங்கம், யாழ். மாவடட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் மாதுலன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இறுதிப் போட்டியில் மென்பந்து துடுப்பாட்டத்தில் யாழ். போதனா வைத்தியசாலை விளையாட்டு அணியை எதிர்த்து யாழ். மாவட்ட செயலக அணியும், உதைபந்தாட்டத்தில் வடமாகாண மதுவரித் திணைக்கள அணியை எதிாத்து யாழ்.மாவட்ட செயலக அணியும் மோதவுள்ளன.(ற-19)

## நிவாரணப் பொருட்கள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான புனர்வாழ்வு நிவாரண நடவடிக்கையின் கீழ் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் தனது பராமரிப்பில் உள்ள நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களுக்கு தொடாந்து உதவிகளை வழங்கி வருகிறது.

இந்த வகையில் நாகர் விபா ழக்கிழமை திக்கத்தில் உள்ள 55 குடும்பங்களுக்கும் தும்பளை கிழக்கில் உள்ள 199 குடும்பங்களுக்குமாக மொததம் 254 குடும்பங்களுககு ஆடைகளும் சூட்கேசுகளும் வழங்கப்படவுள்ளன. (ற-7)


# தரம் — 5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள்

இல:06 ஆக்கம்: சுந்தர் வெளியீடு

♦ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

♦ கீழே உள்ள படங்கள் இரு நகரங்களின் அமைப்பைக் காட்டுகின்றன. இந் நகரங்கள் சார்பாக தரப்பட்ட கூற்றுக்கள் சரியாயின் 'X' எனவும், பிழையாயின் 'Y'எனவும் கூறமுடியாதாயின் 'Z' எனவும் புள்ளிக்கோட்டில் எழுதுக.





01. திண்டி நகர் அழகாகவும் சுத்தமாகவும் உள்ளது. (..............)
02. சாந்தி நகர் அமைதியாகவும் அழகாகவும் உள்ளது (..............)
03. திண்டி நகரானது நெருக்கடி மிக்கதாகவும் அசுத்தமாகவும் உள்ளது (..............)
04. கீழ்வரும் உருக்களில் விரிகோணத்தை உடைய உரு
    1. சதுரம் 2. சாய்சதுரம் 3. செவ்வகம் 4. வட்டம்
05. கீழ்வரும் உருக்களில் வித்தியாசமானது



1. 2. 3. 4.

06. கீழ்வரும் தாவரங்களில் தொட்டவுடன் இலைகள் சுருங்கும் தாவரம் எது?




1. 2. 3. 4.

07. இலங்கையில் தற்போது பயன்படுத்தப்படும் காசுத் தாள்களில் மிகவும் பெறுமதி கூடிய காசுத்தாளில் உள்ள உயிரினம்
    1. யானை 2. கிளி 3. பல்லி 4. கொக்கு

♦ 8-10 வரையான வினாக்களுக்கு சில தரவுகளும் தரவுகளின் அடிப்படையில் முடிவுகளும் தரப்பட்டுள்ளன. ஆனால் தரப்பட்ட முடிவுகளுள் தவறான முடிவினைத் தெரிவு செய்து அதனைக் குறிக்கும் இலக்கத்தை அருகேயுள்ள கூட்டினுள் எழுதுக.


08. தரவு



நிறை 10kg நிறை 10kg
உரு I உரு II

முடிவு
1) இரு திண்மங்களும் சம நிறையுடையவை
2) இரு திண்மங்களுக்கும் 12 விளிம்புகள் உண்டு.
3) இரு பொருட்களினதும் நீள, அகல, உயரங்கள் சமம் ☐

09. தரவு



உரு I உரு II

முடிவு
1) இரு உருக்களினதும் முகங்கள் முக்கோண வடிவம்
2) உரு I இற்கு 4 முகம்
   உரு II இற்கு 5 முகம்
3) உரு I இற்கு 6 விளிம்பு
   உரு II இற்கு 9 விளிம்புகள் ☐

10. தரவு



உரு I உரு II


முடிவு
1) மாதவன், தயாளனிலும் வயது கூடியவர்
2) மாதவன், தந்தையாகவும் தயாளன் மகனாகவும் இருக்கலாம்
3) மாதவன், தயாளனிற்குப் பிறகு பிறந்திருக்கலாம் ☐

♦ அடைப்புக்குள் தரப்பட்டவற்றுள் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

11. கடவுள் இல்லை என்று கூறுபவன் (ஆத்திகன், நாத்திகன்)
12. நாடகம், நடனம் போன்ற நிகழ்ச்சிகளை சபையோர் முன்னிலையில் நடத்துவதற்கு முன் செய்து பார்த்தல் (ஒத்திகை, வெள்ளோட்டம்)
13. ஒரேவேளையில் நூறு விடயங்களை அவதானிக்கக் கூடியவன் (தசாவதானி, சதாவதானி)
14. யாருக்கும் இல்லை என்று சொல்லாது வழங்குபவர் (உலோபி, வள்ளல்)
15. நூலாசிரியர் தமது நூல் பற்றி எழுதுவது (முன்னுரை, அணிந்துரை)


♦ கீழே தரப்பட்டுள்ள எண்கோலங்களை நன்கு விளங்கி வெற்றிடத்திற்குள் அமையப் பொருத்தமான எண்ணைக் கொண்ட விடையின் கீழ்க் கோடிடுக.

16.




1) 008
2) 105
3) 022

17.




1) 11
2) 30
3) 23

18.





1) 3,6
2) 5,6
3) 6,12

19.




1) 12
2) 19
3) 20

20.




1) 14
2) 16
3) 20

♦ சரியான விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

21. ஒரு மாணவன் பாதணிகளை அணியும்போது பின்வரும் செயல் ஒழுங்கைக் கையாள்கின்றான்.
காலுறை அணிதல் → பாதணியை அணிதல் → நூல் கட்டுதல்
இதன் நேர்மாறான செயலைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

.......................................................................................

22. வியாபாரி ஒருவர் பொருள் ஒன்றை நிறுத்தபோது படித்தட்டில் ½ கிலோகிராம் படியை வைத்து பொருளுடன் 75 கிராம் படியையும் வைத்தார். பொருளின் நிறை யாது?

.......................................................................................

23. ஒரு நீர்த்தடாகத்தில் சில மீன்கள் நீந்திச் செல்கின்றன. அவற்றுள் ஒன்றுக்குப் பின்னால் இரண்டும் ஒன்றுக்கு முன்னால் இரண்டும் நடுவில் ஒன்றுமாக மீன்கள் நீந்திச் செல்கின்றன. ஆகவே அங்கு அவதானிக்கக் கூடிய மீன்களின் மிகக் குறைந்த எண்ணிக்கை எத்தனை?

.......................................................................................

24. எல்லா முகங்களும் பரப்பளவில் சம அளவாக அமையும் கணித உருக்கள் இரண்டின் பெயர் தருக?

.......................................................................................

25. சம இடைவெளியில் நேராக நாட்டப்பட்டுள்ள தென்னை மரம், பனை மரம், மாமரம், புளிய மரம் ஆகியவற்றுக்கிடையிலான தூரம் 24 கிலோமீற்றராகும். பனை மரத்திற்கும், மா மரத்திற்கும் இடையிலான தூரம் யாது?

.......................................................................................

♦ கீழ்வரும் அட்டவணையை நன்கு அவதானிக்குக. அதில் தரப்பட்டுள்ள தரவுகளை நிச்சயமாக வேறுபடுத்தி அறிய முடியுமாயின் (✓) எனவும் அவ்வாறு செய்தல் கடினம் (நிச்சயமாக வேறுபடுத்த முடியாது) எனின் (×) எனவும் அவற்றுக்கெதிரே அடையாளம் இடுக. உதாரணமாக செய்யப்பட்டுள்ளதை அவதானிக்குக.

| | தரவு | தன்மை |
|---|---|---|
| | அழகான பூக்கள் | × |
| | சிவப்புப் பூக்கள் | ✓ |
| 26. | தரம் 5இல் படிக்கும் மாணவர்கள் பெயர் | |
| 27. | திறமையான மாணவர்கள் | |
| 28. | நல்ல மனிதர்கள் | |
| 29. | வாரத்தில் உள்ள நாட்கள் | |
| 30. | 10 இலும் குறைவான இரட்டை எண்கள் | |

♦ கீழ்வரும் கூற்றுக்களை நன்கு விபரிக்கும் பழமொழியின் கீழ்க் கோடிடுக.

31. காரணம் இன்றி எந்தவொரு காரியமும் நடைபெறுவதில்லை.
    1. அவனின்றி ஓர் அணுவும் அசையாது.
    2. நெருப்பில்லாமல் புகை வருமா?
32. ஒரு பிள்ளையின் சிறுவயது நடவடிக்கைகளை நன்கு அவதானித்து அதன் எதிர்காலம் பற்றிக் கூறிவிடலாம்.
    1. விளையும் பயிரை முளையில் தெரியும்
    2. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்
33. நலம் தரும் பொருளைக்கூட அளவோடுதான் பயன்படுத்த வேண்டும். அளவுக்குக் கூடினால் அதனாலும் ஆபத்து வரலாம்.
    1. உப்பில்லாப் பண்டம் குப்பையிலே
    2. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு


♦ மிகவும் சரியான விடையின் கீழ்க் கீறிடுக.

34. நான்காக மடித்து வெட்டப்பட்ட கடதாசியைக் காண்கிறீர்கள். இதை விரிக்கும்போது எவ்வாறு தோற்றம் தரும்




(1) (2) (3) (4)

35. முதலாவதாகத் தரப்பட்ட அமைப்பில் இருந்து நேரடியாகப் பெற முடியாத உரு



(1) (2) (3) (4)

36. 14 தீக்குச்சிகளைக் கொண்டு அமைக்கப்பட்ட உருவத்தைக் காண்கிறீர்கள். இதிலிருந்து 4 தீக்குச்சிகளை எடுப்பதன் மூலம் மூன்று பக்கங்களையுடைய மூடிய உருக்கள் 4 இனைப் பெறத்தக்கவாறு அமைக்கப்பட்ட உரு எது?



(1) (2) (3) (4)

(...7 ஆம் பக்கம் பார்க்க)

# காலம் கலிகாலம்....

'காலம் கலிகாலம் ஆகிப் போச்சுடா....' இது உண்மைதான் போலும.

பெற்ற தாயையே கற்பழித்துள்ளான் 20 வயதுடைய இளைஞன் ஒருவன்.

இக் கொடூர சம்பவம் இடம் பெற்றது இங்கல்ல.. அயல் நாடான இந்தியாவில்!

உத்தரப்பிரதேச மாநிலத்தின் தலைநகரம் லட்சுமணபுரி. இங்குள்ள பிம்தோலா காரிகா பகுதியிலேயே கடந்த 30 ஆம் திகதி இவ் அதிர்ச்சிகர சம்பவம் நடந்துள்ளது.

இங்கு கலாவதி என்ற பெண்மணியை அவரது 20 வயது மகன் அருண் என்பவன் கற்பழித்துள்ளான்.

இந்தச் சம்பவத்தை வெளியே கூறினால் விபரீதம் ஏற்படும் என்று அருண் எச்சரித்திருக்கிறான். எனினும், மகனது எச்சரிக்கையையும் மீறி தாயார் அதை வெளியே சொன்னதால் அருண வீட்டை விட்டு ஓடி தலை மறைவாகியுள்ளான். பொலிஸார் அவனை வலைவீசி தேடி வருகின்றனர். (ற)

# மாமனிதர் சிவராமின் நினைவு நிகழ்வு நோர்வேயில்!

கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் மாமனிதர் சிவராமை நினைவுகூரும் ஒன்றுகூடல் முதலாம் திகதி மாலை 6மணிக்கு ஒஸ்லோவில் நடைபெற்றது.

நோர்வே தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவினால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த நினைவு வணக்க நிகழ்வில தமிழ் மக்கள் பெருந்திரளாகப் பங்கேற்று, மாமனிதர் சிவராமிற்கு மலர்வணக்கம் செலுத்தினர்.

நினைவு வணக்க நிகழ்வில் அவரின் நினைவுகளைச் சுமந்து விருதத இசைப்பாடல், மலர்வணக்க நிகழ்வு, கவிதைகள், நினைவுரைகள் ஆகியன நடாத்தப்பட்டன.

தமிழ்த் தேசியம் தனது முத்தான எழுகோல் ஒன்றினை இழந்துவிட்டது. பேரினவாதத்தின் கொடூரக் கரங்கள் ஒரு சுதந்திர ஊடகனின், தமிழ்ச்சமூக அறிவியலாளரின் குரல் வளையை நெரித்துவிட்டது.

தன் கூர்மதி எழுத்தாற்றல் மூலம், தமிழ் மக்களின் உரிமையின் குரலை உலக அரங்கிற்கும் தென்னிலங்கை மக்களுக்கும் ஓங்கி ஒலித்த சுதந்திர ஊடகவியலாளனின் இழப்பு தமிழினத்திற்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

தமிழ் மக்கள் மத்தியில் அரசியல் விழிப்புணர்வு வளர வேண்டும், பல மட்டங்களிலும் தமிழ் மக்கள் மத்தியில் சமூக விடுதலை சாத்தியமாக வேண்டுமென்ற வேணவா கொண்டு அதற்காயும் பல விழிப்புணர்வுக கட்டுரைகளை எழுதியவர் தராக என இந்நிகழ்வில் மாமனிதர் சிவராமின் படைத்துறையியல், அரசியல், சமூகவியல், வாழ்வியல் சார்ந்த ஆய்வுக்கட்டுரைகளுடன் பரிட்சயமுடைய விடுதலைப்பற்றாளர்கள், அவ்ருடன் நெருங்கிப் பழகிய நண்பர்கள ஆகியோர் தமது நினைவுகளில் குறிப்பிட்டனர். (ற-4)

# சைவநெறிப் பரீட்சைக்கான விண்ணப்பங்களை பெற்றுக்கொள்க!

(யாழ்ப்பாணம்)

சைவ பரிபாலன சபையால் வருடாந்தம் நடாத்தப்படும் சைவ நெறிப் பரீட்சைகள் இவ்வருடமும் தரம் 2 முதல் தரம் 12 வரையிலான மாணவர்களுக்கு நடைபெறவுள்ளன.

எதிர்வரும் நவம்பர் மாதம் 5ஆம் திகதி நடைபெறவுள்ள இப்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் சென்ற வருடம் இப்பரீட்சைக்குத் தோற்றிய பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அவை கிடைக்காத பாடசாலைகளும், கடந்த வருடம் விண்ணப்பிக்காத பாடசாலைகளும் பரீட்சைச் செயலாளருடன் தொடர்புகொண்டு விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என சைவ பரிபாலனசபை அறிவித்துள்ளது.

இதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி இம்மாதம் 31 ஆகும். (ற-7)

# மாணவிகள் மீது அங்கசேஷ்டை கலாசாரம் பேணும் குழு விசாரணை

(துன்னாலை)

கரவெட்டி கோவிற் சந்தைப் பகுதியில் உள்ள பெரிய பாலத்தடியில் மாலைவேளையில் பிரத்தியேக ஆங்கில வகுப்புக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த மாணவிகள் மீது அங்கசேஷ்டை புரிந்த துன்னாலை வேம்படிப் பகுதியைச் சேர்ந்த இருவரை வடமராட்சி கலாசாரம் பேணும் குழு விசாரணை செய்து வருகிறது.

மேற்படி இருவரில் ஒருவர் குடும்பஸ்தர் எனவும் மற்றவர் 18 வயதுக்கு உட்பட்டவர் என்றும் தெரியவருகிறது.

இவர்கள் இருவரும் மேற்படி மாணவிகளுக்குத் தொடர்ந்து தொல்லை கொடுத்து வந்துள்ளனர். இந்நிலையில் பிரஸ்தாப மாணவிகள் பெற்றோரின் வழித்துணையுடன் சென்ற சமயமும் இவ்வாறான சேஷ்டை இடம் பெற்றுள்ளது. இதனையடுத்து பெற்றோர் வழங்கிய முறைப்பாட்டையடுத்தே வடமராட்சி அரசியல் துறைப் பொறுப்பாளர் ந.இன்பன் கலாசாரம் பேணும் குழுவினருக்கு அறிவித்து பிரஸ்தாப இருவரும் விசாரணைக் குட்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. (ற-7,101)

# லொறிச்சாரதிகள் கைது

(கல்வியங்காடு)

சட்டவிரோதமாக மணல் ஏற்றி வந்த இரு லொறிகளை கோப்பாய் பொலிஸார் கோப்பாய் சந்தியில் வைத்து மடக்கிப் பிடித்துள்ளனர்.

தென்மராட்சி பகுதியிலிருந்து கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை 6 மணியளவில் மணல் ஏற்றி வந்த லொறிகளையே இவ்வாறு பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளனர்.

ஒரு லொறியில் மணலுக்கு மேல் உருளைக்கிழங்கு பெட்டிகளால் மணலை மறைத்தும், மற்றைய லொறியில் படங்கினால் மூடியும் மணல் ஏற்றிவரப்பட்டுள்ளது.

இவ்விரு லொறிச் சாரதிகளை கைது செய்த கோப்பாய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அருணகிரி ஸ்ரீ செல்வம் இன்று யாழ்.நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவார்கள் எனத் தெரிவித்தார். (க-7-74)

# வினாத்தாள் 05 இன் விடைகள்

01. i.வனப்பு, வடிவு, எழில் (ஏதாவது ஒன்று)
ii.நிற்கின்ற
iii.வானம், முகில் (ஏதாவது ஒன்று)
iv.முகில்கள், மேகங்கள்
v.பெயரெச்சம்
vi.அடுக்குத் தொடர்
vii.வருத்தம் நீங்க முற்படுபவர் போல
viii.செக்கச் சிவப்பாக
ix.செம்மை + நிறம்
x.சூரியன் மறையும் காட்சி / மாலைக்காட்சி

02. i.மிருகங்கள் காட்டில் நீரின்றி அலைந்தன
ii.காலையில் மலர்கள் நறுமணம் வீசியது

03. i.எப்போதும் / இரவு பகலாக
ii.பற்றற்ற நிலை /பட்டும் படாமலும் இருத்தல்

04. i.Box ii.Room
iii.Rabbit iv.Doctor
v.Colour

05. i.பாடசாலை ii.பேனா
iii.புத்தகம் iv.கதிரை
v.ஆசிரியர்

06. i.(3) ii.(1) iii.(2) iv.(1)
v. (2) vi.(3) vii.(3) viii.(1)
ix. C.E.B x.மன்னார்

07. i.தென்னை ii.கள்ளி
iii.வாழை iv.கற்றாளை
v.குப்பைமேனி

08. (2)

09. i.தையற்காரர், நாவிதன்
ii.உழவர் iii.மேசன்/ கொத்தன்
iv.ஆசிரியர் v.தையற்காரர்


10. i.(2) ii.(3) iii.(4)
iv.(3) v.(3)

11. i.மேளம் ii.நாதஸ்வரம்
iii.நத்தை iv.எறும்பு

12. i.7 ii.4 iii.56 iv.6
v.11 vi.28 vii.112/- viii.60

13. i.170 ii.ஆண்கள்
iii.4 iv.3,5 v.21

14.




15. i.கனவுரு ii.6 iii.8 iv.12

17.8

18.4மணித்தியாலம்

19.2500.00

20.2000


21.70 ரூபா

22.
* எழுத்துப் பிழைகளின்றி இருத்தல்
* கூறியது கூறலாக இருக்கக் கூடாது
* தலைப்பிற்குப் பொருத்தமானதாக இருக்க வேண்டும்
* எழுத்து மொழியில் மட்டுமே எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## புலமைப் பரிசில் வினாத்தாள் : 06

37. முதலாவதாகத் தரப்பட்ட உருவுடன் நெருங்கிய தொடர் பற்ற உரு எது?



(1) (2) (3) (4)

38. முதலாவதாகத் தரப்பட்ட தள உருவுடன் தொடர்புடைய திண்ம உரு எது?



(1) (2) (3) (4)

39. முதலாவதாகத் தரப்பட்ட உருவை மூடுவதற்குப் பயன் படுத்த முடியாத உரு எது?




(1) (2) (3) (4)

40. முதலாவதாகத் தரப்பட்ட எண்ணுடன் தொடர்புடைய எழுத்து.

50 C D L M

# தரம் — 5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள்

## வினாத்தாள் இல:04

**கூடிய ஒழுங்கில் மாணவர் பெயர் விபரம் வருமாறு:**

01.ம.றஜி - யா/பிளவத்தை அ.மி.த.க.பாடசாலை.
02.பு.பிருந்தா - யா/வட்டு யாழ்ப்பாணக் கல்லூரி.
03.கி.தினேசன் - வட்டு வடக்கு சித்தன்கேணி.
04.பி.லத்சாங்கன் - யா/இணுவில் மத்திய கல்லூரி.
05.கு.சரண்யா - யா/ஞானசாரியார் கல்லூரி.
06.க.யதுஷன் - யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்.
07.செ.துவாரகா - யா/ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை.
08.ச.அபிராமி - வட்டுதெற்கு வட்டுக்கோட்டை.
09.ஸ்ரீ.ஸ்னேகா - யா/மானிப்பாய் றோ.க.த.க.பாடசாலை.
10.ஸ்ரீ.பிரசாத் - யா/பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயம்.
11.க.சங்கீதா - யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி.
12.ப.கலாபன் - யா/சித்மய பாரதி வித்தியாலயம்.
13.த.தனுஷஷ் - யா/மத்திய கல்லூரி.
14.ஜெ.யோன்டனுஷன் - யா/சம்பத்திரிசியார் கல்லூரி.
15.ஜெ.மதுஷனா - யா/சோதிவேம்படி வித்தியாலயம்.
16.பு.நிரோஜன் - யா/ஞானசாரியார் கல்லூரி.
17.வி.சிந்துஜா - யா/இணுவில் மத்திய கல்லூரி.
18.சி.கோமதி - யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்.
19.ந.கனோயன் - யா/நெல்லியடி மெதடிஸ்த மிசன் த.க.பாடசாலை.
20.மேரிஎட்வேட் நிரோஜினி - சென்மேரின் வீதி, நாவாந்துறை.

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

விவசாய, கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் கீழ் உள்ள இலங்கை நில அளவைத் திணைக்களத்தினால் அளவையியலும் படமாக்கலும் நில அளவையாளர் நாயகத்தின் உத்தரவுப்பத்திரம் வழங்குவதற்கான வருடாந்த பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பரீட்சை எழுத்து, செய்முறை ஆகிய இரு பகுதிகளாக நடாத்தப்படும்.

எழுத்துப் பரீட்சை எதிர்வரும் யூன் மாதம் 25ஆம் திகதியும் செய்முறைப் பரீட்சை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 9 ஆம் திகதியும் ஆரம்பமாகும்.

எழுத்துப்பரீட்சையில் சித்தியெய்திய அல்லது விலக்கு அளிக்கப்பட்ட பரீட்சார்த்திகள் மட்டும் செய்முறை பரீட்சைக்கு அனுமதியளிக்கப்படுவர்.

எழுத்துப் பரீட்சை கொழும்பில மாத்திரம் நடாத்தப்படும். செய்முறைப் பரீட்சை நியத்தலாவை அளவையியல் படமாக்கல் நிறுவனத்தில் அல்லது, கொழும்பில் நடாத்தப்படும்.

இப்பரீட்சைக்குத் தேவையான கொழும்பு 5 நில அளவையாளர் நாயகத்தின் கரியாலயத்திலுள்ள தலைமைப் பிரிவில் அல்லது நியத்தலாவை அளவையியல் படமாக்கல் நிறுவனத்திலுள்ள பரீட்சைக்கிளையில இருந்து விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை பதிவுத் தபாலில் நில அளவை அத்தியட்சகர், பரீட்சைக் கிளை, அளவையியல படமாக்கல் நிறுவனம், நியத்தலாவை என முகவரியிட்ட தபால உறையில் 2005 ஆம் ஆண்டு மே மாதம் 31ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக கிடைக்குமாறு அனுப்பப்படல் வேண்டும்.

தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் நிலஅளவையாளர் நாயகத்தின் உத்தரவுப் பத்திரம் வழங்குவதற்கான வருடாந்தப் பரீட்சை -2005 என குறிப்பிடுதல்வேண்டும். (க-5)

## 5ம் தர் புலமைப் பரீட்சை வினாத்தாள் - 06

மாணவர் முழுப்பெயர் : ..........................................

பாடசாலையின் பெயர்: ..........................................

வீட்டின் முகவரி : ..........................................

மாணவர்களே! உங்கள் விடைகளை 10.05.2005 இற்கு முன் அனுப்பிவைக்கவும். உங்கள் விடைகளுடன் கூப்பனையும் வெட்டி இணைக்கவும்.

வலம்புரி
கல்விப்பகுதி,
15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

குறிப்பு :- மாணவர்களின் நலன்கருதி இவ் வினாத்தாள்களை வைத்துக்கொண்டு, வினாக்களுக்கான வ்டைகளை வேறு ஒரு தாளில் எழுதி கூப்பனுடன் சேர்த்து அனுப்பவும். வ்னா இலக்கங்களை சரியாகக் குறிப்பிடவும். பாடசாலையின் பெயரினை முழுமையாக எழுதவும்.

# 26.12.2004

# ஆழிப்பேர் அடுக்கு அலைகளின் அகோரத் தாண்டவம்

### மின்னாமல் முழங்காமல்

தாளையடி, யாழ்.குடாநாட்டில் ஒரு மீனவக் கிராமம். போரினால பாதிக்கப்பட்டு பெரும அழிவுகளுக்கு முகங்கொடுத்த கரையோர வதிவிடங்களுள அதுவும் ஒன்று. அண்மைக்காலத்தில், முன்பு வான், கடல், தரைவழியே வீசப்பட்ட குண்டுகளினால் இடிந்திருந்த தமது இல்லங்களைத் திருத்தி மீண்டும் குடியமரத தொடங்கினா. பலர் வெளியூர் களில தற்போது வசிப்பவர்கள் விழாக் காலங்களிலும், கொண்டாட்ட நிகழ்சசிகளைத தமது சொந்த பந்தங்களைச் சந்திப்பதற்கும் இல்லங்களைச் சீர்செய்து அமைப்பதற்கும ஊருக்குச் செல்வது வழக்கம்.

சென்ற ஆண்டு மார்கழித திங்கள் இயேசுபிறப்பு விழாவிற்கு அடுத்த நாள ஞாயிறு, சுகத் என்னும் இளைஞன் விடுமுறை நாட்களை செலவழிக்க தனது வீட்டிற்கு வந்திருந்தான். காலை 8.25 பெரியப்பாவுடன் தன வீட்டு மணடபத்தில உரையாடிக் கொண்டிருந்தவன், பேரிரைச்சலுடன் வருவது எதுவென்று பார்க்க எழுந்து முற்றத்துக்கு ஓடிவந்தான்.

இமைமூடித் திறக்கும் கணத்திற்குள், வெள்ளத்தினால் தான் அள்ளப்பட்டுச் செல்லுமுன், தனது பெரியப்பா கடல் அலைகளால் தூக்கி எறியப்பட்டு சுவருடன் மோதி அவலபபடுவதை அவனால்உள்ளுணர முடிந்தது. நீரின் வேகத தால் முற்றத்து எல லைச் சுவர் சரிந்து வீழ்ந்தது. நல்ல காலம் அவ்விடிபாட்டிற்குள் அவன் அகபபடவில்லை. அவனுக்குப் பின்னே இரைந்துவந்த ஓர் அலை, அவனை உயரத்தூக்கிச் சென்று ஐம்பது மீற்றர்களுக்கு அப்பால் அவனை வீழ்த்தியது. சடுதியாக தான் தரையில் நிற்கும் உணர்வுடன் செய்வதறியாது நிற்க. தன்னைக் காவிவந்த வெள்ளமோ அசுர வேகத்தில் முன்னே பாய்ந்து கட்டடங்களை இடித்தும், மரஙகளை வேருடன் பெயர்த்தும் செல்வதைப் பார்த்தான். தனக்குப் பினனேயும் வெள்ளம்! முன்னேயும வெள்ளம்! ஓடிச்சென்று ஆலமரம ஒன்றில் ஏறிநின்றான்.

அவனுக்கு முன்னே சென்ற வெள்ளம் அதேவேகத்தில் திரும்பிக் கடலை நோக்கிப் பாய்ந்து வந்து கொணடிருந்தது. பாதுகாப்புக்காக மரந் தடிகளைப் பறறிய படியும் வேலகளில் தொஙகிய படியும் செய்வதறியாது நின்ற பெண்கள், பிள ளைகள் அனைவரையும் அது கடலுக்குள் அள்ளிச சென்றது. ஆலமரதத்தில் நின்றபடியே, காயமடைந்து கதறியழும் பலரும் இழுபட்டுச் செல்வதைப் பார்ததான். சொந்தம், பந்தம் என்று இருந்த எவரையும் அன்று அவனால காப்பாற்ற முடியவிலலை. தன் கண் முன்னால் பரிதவித்து நின்ற உறவுகளின் அவல ஓலமும் உதவி கோரும் வேண்டுதல்களும, பெண்கள், குழந்தைகளின் அவலச்சாவும் அவன்பாலும் பெண்களினதும் குழந்தைகளினதும் சடலங்கள் எல்லா இடமும் வீரவக்கிடப்பதைப் பார்த்தேன். திகைப்படைந்த ஆண்களும், கதறி அலறும் பெண்களும் கடற்கரையோரத்தைவிட்டு அகன்று செல்வதையும் பார்த்தேன்'' இது இநதியாவின் கடலூர் குடிமகன் ஒருவர் கூறியது.

“கொந்தளித்த கடலையும், சூறாவளியையும் பாத்திருக்கிறோம். ஆனால் கடலிலிருந்து இப்படி பேரலைகள் சீறிப்பாய்ந்து வருவதை யாரும் பார்த்ததும் இல்லை. கேட்டதும் இல்லை.'' இது பாத'க்கப்பட்ட இன்னுமொரு இந்திய மகனின் மனப்பதிவு.

### காலன் வந்த கோலம்

26.12.2004! இந்தோனேசியாவைச சேர்ந்த சுமாத்ரா தீவுக்கு அண்மையில் 7.58 மணிக்கு பூமி அதிர்வொன்று ஏற்பட்டது. அதன் விளைவாக எழுந்த கடல் அலைகளில் காலன் பவனிவரத் தொடங்கினான். சொற்ப மணித்துளிகளில் அத்தீவில் ஆயிரக்கணக்கில் மக்கள் கொல்லப்பட்டனர். தொடர்ந்து, தாய்லாந்து, மலேசியா, பர்மா, பங்களாதேஷ் அலைகளின் அகோரத்தை அனுபவித்தன. இரண்டு மணி நேரத்திற்குள் இலங்கையும இந்தியாவும் பேரழிவைச் சந்தித்தன. நாலுமணி நேரத்துள் மாலைதீவுகள், ஏழு மணி நேரத்துள் சோமாலியா, எட்டு மணி நேரத்துள் செய்ஷல்தீவுகள், கெனியா, தன்சானியா என்ற நாடுகளும் பாதிக்கப்பட்டன. இவை அனைத்தும் இந்திய பெருஙகடலை ஒட்டிய நாடுகள். இவைகளுள் பெரும உயிழப்புகள் நிகழ்ந்த நாடுகள் முறையே இந்தோனேசயா, இந்தயா, இலங்கை ஆழிப்பேர் அடுக்கு அலைகளின் விளைவாக நெஞ்சை உருக்கும் காட்சிகளும் வார்த்தைகளால் வடிக்க முடியா நிகழ்ச்சிகளும் வரலாற்றில் பதிவாகின. ஊருக்குள் ஆழ நுழைந்து அதை உழுதுசென்று அழித்தொழித்த முல்லைத்தீவு போன்ற நகராங்கள், வயலவெளிகளும், தூக்க' ஏறியப்பட்ட சின்னா பின்னமான வள்ளங்கள், அடித்தளத்துடன் பெயர்க்கப்பட்ட கட்டடங்கள், திருச்சிலைகளும், கோபுர முகப்புகளும் தவிர்ந்த மற்றவை அனைத்தும் இடிந்து, உடைந்து நொறுங்கி நிற்கும் கோவில்கள், ஆலயங்கள், குழந்தைகளின இறந்த உடல்களை முத்தமிட்டுக் கதறியழும் தாய் தந்

இறந்தவர்களின் உடல்களை பற்றைகளுக்குள் தேடிச் சென்ற போது அங்கு அழுதபடி கிடந்த பெண் குழந்தையை தூக்கியெடுத்து “அலை அரசி'' எனப் பெயர் சூட்டி அதனைத் தமது நலன்புரி நிலையத்தில் நாயகியாக்கி வலம்வரும் பெருந்தகையோர்!

### புதுச்சொல்! பழம்பொருள்

இன்று பன்மொழிகளிலும் அடிக்கடி பயன்படுத்தப்படும் “சுனாமி'' என்னும் ஜப்பானிய மொழிச் சொல, சென்ற நூற்றாண்டின் அறுபதுகளில் ஆங்கில மொழிவழக்கிற்கு அது அறிமுகப்படுத்தப்பட்டது. ஜப்பானிய மொழியில் “சு” என்பது துறைமுகம். “னாமி'' என்பது அலை. ஜப்பான் நாட்டின கரையோரங்களில் பல துறைமுகங்கள் உள்ளன. அந்நாட்டில் பல எரிமலைகளும் உள்ளன. அடிக்கடி பூமி அதிர்வுகளும் நடக்கின்றன. எரிமலைகள் வெடிக்கும் போது அல் லது பூமி அதிர்வுகள் நிகழும் போது அந்நாட்டில் கடற்கரைப் பகுதிகளில் துறைமுகங்களை பேரலைகள் தாக்குகின்றன. இவ அனுபவப் பின்னணியில் தான் “சுனாமி” என்னும் பெயர் உருவாகியது. பெருஙகடல்படுககையில் ஏற்படும் அதிர்வினால் கடல் அலைகள் உருவெடுககின்றன. அதை நீளமானதாயும் உயரமானதாயும் பாய்ந்து அடுககடுக்காக வரும் என “சுனாமி” என்னும் சொல்லுக்கு ஆங்கில ஒக்ஸ்வொட் அகராதி விளக்கம் தருகிறது. தமிழ'ல், ஆழிப்பேர அடுக்கு அலைகள் என வழங்கலாம்.

இயற்கையால் விளையும் பெரும் விபத்துக்கள் அல்லது பேரழிவுகள் தரும் நிகழ்ச்சிகளுள் ஆழிப்பேர் அடுக்கு அலைகள் என்பது தான் அடிக்கடி நிகழாதது. கரவாகச் செயற்படுவது. பெரிதாகப் புலபபடாத நீர் வீக்கத்துள் ஒரு நீர்வாயுக் குண்டின் அபார சக்தியை உள்ளடக்கி நிற்பது.

ஆழிப்பேர் அடுக்கு அலைகளை தோற்றுவிப்பன நிலநடுக்கங்கள் மட டுமனறு. நிலச்சரிவுகள், குறுங்கோள்களின் (ஒருகிலோ மீற்றரில் இருந்து ஆயிரம் மீற்றர் நீளமுள்ள செவவாய்க்கும் வியாழனுக்கும் இடையில கோளகளுடனொத்துக்

கும் பலர் ஓடிப்போவர். (26.12.2004 இன் போது தமிழகத்தின் மாமல்லபுர கடற்கரை வற்றி, முன்பு கடலுக்குள் மூழ்கிய கோவில் ஒன்றினையும் சில சிலைகளையும் பார்க்கக்கூடியதாக இருந்தது. எனக் கூறப்படுகிறது) இது அச்சத்திற்குரிய ஒரு அடையாளம். இதுதான் இம்முறை இலங்கையிலும் தாய்லாந்திலும் நடந்தது)

ஆழிப்பேர் அடுக்கு அலைகள் என்பது “ரைடல் உவேவ்ஸ்'' என ஆங்கிலத்தால் அழைக்கப்படும் கடல நீரோட்டத்திற்கும் ஒரு வகையில் பொருந்தும். கடற் கரையில் இருந்து நோக்கும் போது இரண்டும் ஒரேவிதமாகத் தோற்ற மளிக்கலாம். அத்தோடு ஆழிப்பேர் அடுக்கு அலைகளால் ஏற்படும் பாதிப்பு கடல் நீரோட்டததிலும் தங்கியிருக்கலாம். ஆனால் ஒன்று மற்றையது அல்ல. ஒரு அடிப்படை வேறுபாடு உணடு. “ரைடல் உவேவ்ஸ” என்பது சந்திரனின் ஈர்ப்புசக்தியால் விளைவது தவிர ஆழிப்பேர் அடுக அலைகள் நீளமானவை. ஒரு அலை மேல் நுனக்கும் அடுத்த அலை மேல் நுனக்கும் நூறுமைல் தூரம் முதலாக இருக்கலாம். ஆழ்கடலில் அவை ஒருசில அங்குல உயரம்மட்டும் இருக்கலாம். ஆனால கடலின் ஆழம் குறையத் தொடங்க அலைகளின் நீளமும் குறைந்து, உயரம்பெருகத் தொடங்கும். அவ்வுயர் அலைகள் கரையில்மோதி பெரும் அழிவை ஏற்படுத்தும்.

ஆழமற்ற நீர்ப்பகுதியை அலையொன்று அடையும்போது அது தன் வேகத்தைக்குறைத்து, குறுகிய தனது அபார சக்தியை அதிமிக வேகத்துடன செலுத்துகிறது. அது உயரமான அலைகளாக வரலாம். அல்லது மெல்ல உத்வேகம்கொண்டு சமவெளி ஒத்த அலைகள் தோன்றலாம். சிலவேளை நூறு மீற்றர் உயரமான அலைகள் கரையில் இருந்து ஆயிரம் அடி தூரம் வரை செல்லமுடியும்.

### இயற்கையின் இயல்பு

26.12.2004! சுமாத்திரா தீவில் இருந்து 150 கிலோ மீற்றர் தூரத்தில் தெற்குப் புறம் உள்ள இந்தியப் பெருங்கடலில் 18 மைல்கள் ஆழத்தில் பூமி அதிர்வு நடந்த

எரிமலைக்குழம்பும், கப்புறோவும் கொண்ட பாறைகளை உடையது.

புவியோட்டின் கீழே, பூமியின் மேற்பரப்பில் இருந்து கிட்டதட்ட 2900 கிலோ மீற்றர் அமைந்துள்ள இடையோடும் அதற்குக் கீழே 3472 கிலோ மீற்றர் தடிபபுடைய கோளவகம் என்னும் உள்ளீடும் காணப்படுகின்றன.

புவி ஓடு கடல்நீரில் பனிக்கட்டி மிதப்பதைப்போன்று சமநிலை பேணும்வகையில் பாகுத்தன்மை வாய்ந்த உட்படைகளில் மிதக்கின்றது. அதனால், புவியோடு பூமியில் ஏற்படும் அகவிசைகளால் உந்தப்பட்டு சில வேளைகளில் மேல் உயர்ந்தும், சிலவேளைகயில் மடிந்தும், தாழ்ந்தும் பிளவுறும பல மாற்றங்களுக்கு உளளாகும்.

இன்று பலரும் புவிய'யலின் “தகடோட்டுக் கொள்கை”-யை ஏற்றுக் கொள்கிறார்கள. இதன் படி புவியோடு 6 பெருங்கவசத் தகடுகளாக பன்னிரு சிறு தகடுகளாலும் உருவாக்கப்பட்டுள்ளது. இவை நகரும் இயல்புடையவை. சிலவேளை நேர் நேரில் ஒன்றை ஒன்று முட்டி மோதியும் (ஒடுங்கும் கவசத்தகடுகள்) சில வேளை, ஒன்றுமேல உயர அல்லது கீழமிழ மற்றது அமிழ்த்தியும் (அமிழும் கவசத் தகடுகள்) சிலவேளை எதிர் எதிர்த் திசைகளில் ஒன்றை ஒன்று விலகியும் விலகும் கவசத்தகடுகள் செலலும்.

பல்லாயிரம் ஆண்டுகளாக இந்தியப் பெருங்கடலில் ஒன்றை ஒன்று முட்டி மோதிக்கொண்டிருந்த இந்தியக் கவசத் தகட்டோடும், பர்மா கவசத் தகட்டோடும் அமிழும் கவசத் தகடுகளாக மாறின. உண்மையில் ஆண்டுக்கு ஓருசில சென்ாமீற்றர் பர்மா கவசத் தகட்டினுள் இந்தியக்கவச ஓடு மெதுவாக அமிழ்ந்துகொண்டிருந்த நிலைமாறி, மேலே உயர்நது நின்ற கவச ஓடு சடுதியாக கடற்கீழ்முகட்டு ஓரமாக 60வது அடிகள் உயர எழுந்தது என ஆய்வாளாகள் கூறுகின்றனர். அதனால் பர்மா கவசத் தகட்டின் சமுத்திர ஓட்டின் 600 மைல் நீளம் துண்டாடபபட்டுள்ளது என்கின்றனர் ஒருசிலர். இத்தகைய பாரிய அசைவு கடல் நீரின் சமநிலையைக் குலைத்து அதைக் கீழே இறக்கி பேரசைவுகளை உண்டாக்குகின்றது. அதனால் வட்ட வட்டமாக கடற்கரைகளை நோககி விரைநது செல்லும் அலைகளை உருவாக்கின்றன.

### மாறிய பூகோள அமைப்பு

களின் அவல ஓலமும் உதவி கோரும் வேண்டுதல்களும, பெண்கள், குழந்தைகளின் அவலச்சாவும் அவன் நெஞ்சை உறுதித்தி நினைககும் பொழுதெல்லாம் அவன்ன அழச்செய்தன. வெள்ளததால்அள்ளுண்டு சென்ற தனது பெரியப்பாவின் புண்பட்ட உடலையாவது தேடிக் கண்டுபிடித்தது அவனுக்கு ஒருவகை நிம்மதியை அளித்தது.

தனது அனுபவத்தைப் பகிர்ந்து கொண்ட சுகத், அலைகள் பொங்கி வந்தது கிபிர் விமானங்கள் குண்டு வீச வருவதையொத்ததாக இருநதது என்று கூறினான். அவனுக்கு அருகில் நின்ற வேறொரு இளைஞன், கடல் அலைகளில் மக்கள் மடிந்ததை “ரைறறானிக்” அனுபவத்தை வார்த்தைகளாலும் சைகைகளாலும் விளக்கினான்.

இத்தகைய மனப்பதிவுகளையும் எதிரொலிகளையும் 26-12-2004 பல்வேறு நாடுகளிலும் ஏற்படுத்தியது.

“பேர் இரைச்சல் ஒன்று கேடடது. நான் எழுந்து ஓட முனபு முப்பது அடி உயரமான ஒரு நீர் மதில என்னை விழுங்கியது. என்னுடைய வாய்க்குள் உப்புநீர் போகாமல் தடுக்க நான் மூச்சுப் பிடித்துக் கொண்டிருந்தேன். நான் இறக்கப்போகின்றேன் என்பதை உணர்ந்தேன்” இது தாய்லாந்தின் புககே என்ற நகரில் பாதிக்கப்பட்ட ஒருவர் கூறிய அனுபவ வெளிப்பாடு.

“நான் எனது குடுமபத்தினரைத் தேடத் தொடங்கினேன். ஆனால் ஆடாத, அசையாத விகாரமான உருவங்களினது, பெரும்

கும் கோவில் கள், ஆலயங்கள், குழந்தைகளின இறந்த உடல்களை முத்தமிட்டுக் கதறியழும் தாய் தந்தையர், கட்டட இடிபாடுகளுள மீட்டு எடுக்கப்படும் உருக்குலைந்த உடல்கள், நூற்றுக் கணக்கில் நிலத்தில் அடுக்கப்பட்டிருக்கும் பிணக்குவியல்கள், எஞ்சிய உறவுகளைக் கட்டித்தழுவி ஆறுதல் அடையும் அன்னையரும் தந்தையரும் உற்றாரும் உறவினரும், குடும்பத்தில் அனைவரையும் அல்லது பலரை இழந்து பைத்தியம் பிடித்து அலையும் உருவங்கள், தமது உறவுகளின் புகைப்படங்களைக் கையில் ஏந்தி “இவர்களைக் கண்டீர்களா” என்று கேட்டுப் புலம்பி அலையும் தனி மனிதர்கள், பல நாட்கள் அணிந்து கசங்கிய ஆடைகளுடன் நலன்புரி' நிலையங்களில இடக்குமுடக கெனப் படுத்துறங்கும் அகதிகள கூட்டம்... கிழக்கில், கல்முனையில் நான்கு மாதக் குழந்தையொன்றை தம்முடையதென்று அழுது புலம்பும் தாயும், தந்தையும் முல்லைத்தீவில் ஒரே குடுமபத்தைச்சேர்ந்த எழுபதுக்கும் மேற்பட்டோரின் நினைவைத் தாங்கி நின்றும் உறவினரின் சோகம்... இப்படி உள்ளத்தை உறையவைக்கும் பல காட்சிகள் இச் சோகக் கதைகள் ஒருபுறம். மறுபுறம், ஆச்சரியமான நிகழ்ச்சிகளுக்கும் குறைவிலலை. தாங்கள் முன்பின் அறியாத ஓர் அற்புதத் தாய் தம்மிருவரையும் நீரில் தாங்கி, தரையில் இறக்கினாள் என்று வியப்புடன் கூறும் சிறுவர்கள் இருவர்.

இருந்து ஆயிரம் மீற்றர் நீளமுள்ள செவவாய்க்கும் வியாழனுக்கும் இடையில கோளகளுடனொத்துக் கதிரவனைச் சுற்றிச்செல்லும் இரும்புக் கற்பாறையிலான கோல்கள் ) வீழ்ச்சி, எரிமலையின் குமுறல் போன்ற நிகழ்ச்சிகளாலும் அவை ஏற்படலாம்.

திறந்த கடற்பரப்பிலே இவ் அலைகள் மூன்று அடி உயர எழும்பி விரைந்து சென்றாலும், அலைகளின உயர்வான பகுதி நூறு மைல் பரந்து பாயக்கூடியவை யாயின் அதனைக் கண்டுபிடிப்பது கடினமாக இருக்கும். ஒவ்வொரு அலையும் கரையை வந்தடையும் நேரம் ஐந்து மணித்துளிகளில் இருந்து தொண்ணூறு மணித்துளிகள் வரை நீடிக்கலாம். முதல் அலை கரையை அடைந்து திரும்பிச் செல்லும்போது எதிர்நிக்கின்ற அனைததையும தன்னுடன் அள்ளிச்செல்லும. மரங்களிலும் மற்றைய உயா கட்டடங்களிலும் தொங்கி அல்லது தங்கியிருப்பவர்களை கடலுக்குள் இருந்து நூறு மீற்றருக்கு மேல் தரைககுள் புகும் அலைகள் அதே வேகத்தில் கடலை நோக்கி திரும்பி வரும் போது இழுத்துச் செல்லும். கடல் அலைகளின் மடிப்பு அவைகளின் மேல் நுனிக்கு முன்பதாக கரையை அடைந்தால், நீா வற்றத்தொடங்கும். இக்காட்சி அழகானதாயும் வியப்புடைய தாயும இருக்கும். அதைப் பார்ப்பதற்கும் வற்றிய கடலில் உள்ள மீனகளையும் பவளக் கொடிகளையும் அழகிய கற்களையும் அள்ளுவதற்

தில் தெற்குப் புறம் உள்ள இந்தியப் பெருங்கடலில் 18 மைல்கள் ஆழத்தில் பூமி அதிர்வு நடந்த போது பூமியின் சூழற்சி ஒரு கணம் ஆட்டம் கண்டது. இருநூறு நொடிப் பொழுதுகளில கோடானு கோடி தொன நீரை இடம்பெயரச்செய்து ஐந்நூறு மைல் வேகத்தில் கடலின் மேற்பரப்பில் சலசலப்பு இல்லாது கண்ணுக்குப் புலபபடாது செல்லும் அலைகளை உருவாக்கியது. இவ் அலைகளின் வேகம் எத்தகையதாக இருந்தது என்றால் கடறகரைக்கு அண்மையில் மிதந்து கொண்டிருந்த முககுளத்தல் அடையாளக் கருவியை நொடி ஒன்றிற்குள் நாற்பது அடிகள் மூழ்கச் செய்தது.

இயற்கையின் இவ் “விளையாடலை” புரிந்துகொள்ள ஒரு சில புவியியல்சார் தரவுகளை அறிந்திருப்பது அவசியம்.

பூமியின மொத்தப் பரப்பளவின் 29 வீதம் நிலப்பரப்பாகவும் 71 வீதம நீர்ப் பரப்பாகவும் அமைந்துள்ளது.

பூமியின் மேற்படை புவியோடு என அழைக்கப்படும். இதன் தடிப்பு பத்துக் கிலோமிற்றரில் இருந்து ஐம்பது கிலோமீற்றர்வரை உள்ளது. இது பூமியின் ஒட்டுமொத்த உருவத்துடன் ஒப்பிடும்போது ஒரு அப்பிள் பழத்தின் தோலுக்குச் சமன் என அறிஞர் கூறுவர்.

புவியோடு இரண்டுவகையானது கண்ட ஓடு, சமுத்திர ஓடு. சராசரி பததுக்கிலோ மீற்றர் அளவிலான தடிப்பினை உடைய சமுத்திர ஓடு

## மாறிய பூகோள அமைப்பு

பூமி அதிர்ச்சி ஏற்பட்டமையப் பகுதியல, கடலின் அடித்தளததில கீழே காணப்படும் சமுத்திர ஓடு முப்பதில் இருந்து எண்பது அடிகள் வரை இடம்பெயர்ந்துள்ளது என ஆய்வாளர்கள் கணிப்பிட்டுள்ளனர். சுமாத்திரா தீவு தெற்கே நூறு அடிகள் நகர்ந்துள்ளது எனச் சிலர் கருதுகிறார்கள். மேலும், பூமி அதிர்ச்சியின் மையத்தில் இருந்து 460 மைல் தூரத்தில் உள்ள தாய்லாநதின் நாட்டின் புக்கெட் தீவு 3.9அங்குலமும் சிங்கபூர் 0.8 அங்குலமும் நகர்ந்துளளன என அதே ஆய்வாளர்கள் கூறுகின்றனர். பர்மா நாடு நாற்பதடி உயர்ந்திருப்பதாகவும் கருதப்படுகிறது.

நம் தாயகத்திலும் வடமராட்சி முல்லைத்தீவு கரையோர விளிம்புகளின் தோற்றம் மாறியுள்ளது என மக்கள் கூறுகின்றனர்.

இதில் உண்மை இருப்பதாகத் தெரிகிறது. மேலும் இந்தியப் பெருங்கடலில் வெப்பநிலை 1 தொடக்கம் 2.5 பாகைவரை குறைந்துளளதாகவும், கடலின் மேற்பரப்பு மணிககு 20 கிலோ மீற்றர்களில் இருந்து காற்றின் வேகம இப்பொழுது நாற்பது கிலோமீற்றர்களாக அதிகரித்துள்ளதாகவும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். மேலும் கடல் நீா ஓட்டத்திலும் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன என மீனவர்கள் முறையிடுகின்றனர்.

(தொடரும்)

# புற்றுநோய் பரம்பரை வியாதியல்ல

# குணப்படுத்தக் கூடியதே

1

இலங்கையின் வடபகுதியில் புற்று நோயாளர்களின் எண்ணிக்கை தற்போது நாளாந்தம் அதிகரித்து வருகிறது.

இவற்றில் குறிப்பாக ஆண்களுக்கு வாய்ப்புற்று நோயும் பெண்களுக்கு மார்பகப்புற்று நோயும் குழந்தைகளுக்கு இரத்தப்புற்றுநோயும் அதிகமாகக் காணப்படுகிறது.

இவ்வாறான புற்றுநோய்கள் பரவுவதற்கு உணவு மற்றும் பழக்கவழக்கங்களே காரணமாகக் கண்டறியப்பட்டுள்ளது. எனவே புற்றுநோய் ஏற்படுவதற்குக் காரணமான உணவு மற்றும் பழக்க வழக்கங்களைத் தவிர்த்துக் கொள்ளல் மூலம் புற்றுநோய்த் தாக்கத்தில் இருந்து விடுபடமுடியும்.

வடபகுதியைப் பொறுத்தவரையில் பெரும்பாலானவர்கள் புற்றுநோய்த் தாக்கம் ஏற்பட்டதும் அதனைக் கவனியாமல் சிகிச்சை பெறாமல் இருந்துவிட்டு நோய் முற்றிய பின்னரே வைத்தியசாலையை நாடுகிறார்கள். இதனால் நோய் மருந்துகளுக் கட்டுப்படாத நிலையை அடைந்துவிட்டதால் எத்தகைய சிகிச்சையளித்தும் நோயாளர்களைக் குணப்படுத்த முடியாது போகிறது. இதனால் இயன்ற அளவில் நோயைக் குறைக்கும் சிகிச்சைகளையே வழங்கி வருகின்றோம்.

> புற்றுநோய் மருந்தினால் குணப்படுத்த முடியாத நோய் அல்ல. ஆரம்பக் கட்டத்திலேயே சிகிச்சை பெற்றால் பூரணமாகக் குணமாக்கலாம்

எனவே புற்றுநோயாளர்கள் ஆரம்ப கட்டத்திலேயே சிகிச்சைகளுக்காக வந்தால் அவர்களை பு,ரணமாகக் குணமாக்கக் கூடிய சூழ்நிலை காணப்படும். எனவே புற்றுநோயாளர்கள் ஆரம்பக்கட்ட நோய்த் தாக்கத்தின் போதே சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு வருவதே சாலச் சிறந்தது.

வடபகுதியிலுள்ள புற்றுநோயாளர்கள் ஆரம்பக் கட்டத்திலேயே வைத்தியசாலையை நாடாமைக்குப் பல காரணங்கள் உள்ளன.

இதில் நீண்டகாலமாக வடபகுதிக்கென ஒரு புற்றுநோய் வைத்தியசாலை காணப்படாமை பிரதானமான காரணமாகக் காணப்படுகிறது.

மக்களின் இந்தக் குறைபாட்டை நீக்கும் முகமாக தற்போதுதான் சிறியளவிலான புற்று நோய் வைத்திய பிரிவு ஒன்று யாழ்.போதனா வைத்தியசாலையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எனவே, எதிர்காலத்தில் ஆரம்பக் கட்டத்திலேயே சிகிச்சைக்காக வருவோர் தொகை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நோய்த்தாக்கதில் ஆரம்பக்கட்டத்திலேயே நோயாளர்கள் வரும் பட்சத்தில் அவர்களுக்கு சத்திரசிகிச்சை மற்றும் கதிர்ச்சிகிச்சை மூலம் அவர்களைக் குணமாக்க முடியும்.

எனினும் சில புற்று நோய்களுக்கு நாங்கள் மருந்து பாவிக்க வேண்டியவர்களாக உள்ளோம்.

எனினும் யாழ்.குடாநாட்டைப் பொறுத்த வரையில் சத்திர சிகிச்சை மூலமும், மருந்துப்பாவனை மூலமுமே புற்றுநோய்க்கான சிகிச்சை வழங்கப்பட்டுவருகிறது.

இந்தக் குறைபாட்டைத் தீர்க்கும் முகமாக ஏப்ரல் மாதம் நடுப்பகுதியில் இருந்து தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலையில் கதிர்ச் சிகிச்சை இயந்திரங்கள் மூலமான சிகிச்சைகள் வழங்க்கப்பட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்தகைய புற்றுநோய் சிகிச்சைகள் தெல்லிப்பழையிலும், யாழ்.போதனா வைத்தியசாலையிலும் நடைபெற்று வருகின்றபோதும், தெல்லிப்பழைக்கு சிகிச்சைக்கு வருவோர் தொகை மிகமிகக் குறைவாகக் காணப்படுகிறது. அதிகமானோர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கே சிகிச்சைக்காக வருகின்றனர்.

இதற்கு போக்குவரத்து சேவைகள் ஒரு காரணமாகும். தெல்லிப்பழை வைத்தியசாலையைச் சூழ இராணுவ அதிஉயர் பாதுகாப்பு வலயம் காணப்படுவதாலும் இராணுவ சோதனைக் கெடுபிடிகள் பிரயாணக் கஷ்டங்கள் போன்றவையாலும் நோயாளர்களின் வருகைக் குறைவாகக் காணப்படுகிறது.

அனைத்திற்கும் மேலாக புற்றுநோய் சிகிச்சை என்பது பல்துறைசார் சிகிச்சை முறையாகக் காணப்படுவதினால் அதற்குரிய வசதிகள் தெல்லிப்பழை வைத்திய சாலையில் குறைவாகக் காணப்படுவதனால் அங்கு நோயளர்கள் முழுமையாகச் சிகிச்சை பெறமுடியாத சூழ்நிலை காணப்படுகிறது.

புற்றுநோய் சிகிச்சைக்கு சதகிரசிகிச்சை நிபுணர், மருத்துவ நிபுணர் கதிரியக்க நிபுணர், கதிர்ச்சிகிச்சை நிபுணர், பெண் நோயியல் நிபுணர், குழந்தை மருத்துவ நிபுணர், இரத்த நோய்நிபுணர் போன்றோரின் பங்பளிப்புகள் மிகவும் அவசியமானதாகும் இவ் வசதிகள் தெல்லிப்பழை வைத்தியசாலையில் இல்லாதுள்ளமையே தெல்லிப்பழை வைத்தியசாலையில் புற்றுநோய் சிகிச்சையை முழுமையாக வழங்கப்பட முடியாமைக்கு பிரதான காரணமாக உள்ளது.

ஆனால் இத்தகைய வசதிகளுடன் கூடியதாக யாழ்.போதனா வைத்தியசாலை காணப்படுகின்றமையால் புற்றுநோய்ச் சிக்சையை திறம்பட வழங்க யாழ். போதனா வைத்திய சாலையே பொருத்தமானதாகக் காணப்படுகிறது.

## புற்று நோயியல் நிபுணர் நடராஜா ஜெயக்குமார் செவ்வி

தெல்லிப்பழைப் புற்றுநோய் வைத்திய சாலையில் கதிரியக்க சிகிச்சை இயந்திரங்கள் பொருத்தப்பட்டு அங்கு அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தாலும்.

பல்துறைசார் சிகிச்சைக்கு பொருத்தமான இடம் யாழ்.போதனா வைத்திய சாலை என்பதனால் யாழ்.போதனா வைத்தியசாலையிலும் ஒரு சிகிச்சை நிலையம் அமைக்கப்படுவது அவசியம்.

> புற்றுநோய்ச் சிகிச்சைக்கு சத்திர சிகிச்சை நிபுணர், மருத்துவ நிபுணர், கதிரியக்க நிபுணர், கதிர்ச் சிகிச்சை நிபுணர், பெண் நோயியல் நிபுணர், குழந்தை மருத்துவ நிபுணர், இரத்த நோய் நிபுணர் ஆகியவர்களின் பங்களிப்பும் தேவை

இதன்மூலமே மக்கள் அதிக பயனைப் பெறமுடியும் புற்றுநோய் சிகிச்சை நிலையத்தை இராணுவகட்டுப்பாட்டினுள் உள்ள வைத்தியசாலையில் வைத்துக் கொண்டு மக்களுக்கான புரண சேவையை வழங்க முடியாது.

எனவே, அங்கு புற்று நோய் சிகிச்சை நிலையத்தை தனியே வைத்து நடத்தக் கூடிய வைத்திய நிபுணர் வசதிகள் மக்களுக்கான சீரான போக்குவரத்து வசதிகள் என்பன ஏற்படும் வரையில் யாழ். போதனா வைத்தியசாலையில் புற்றுநோய் சிகிச்சை நிலையத்தை இயக்குவது அவசியம். இதற்காக யாழ்.வைத்தியசாலை புற்றுநோயாளர்களுக்கு எத்தகைய சிகிச்சையை வழங்குவது எனத் தீர்மானித்து அதன்பின் அவர்களுக்கான சிகிச்சையை தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு அனுப்பி அங்கு சிகிச்சை வழங்கத் திட்டமிட்டுள்ளோம் என புற்றுநோயியல் நிபுணர் நடராஜா ஜெயக்குமார் வலம்புரிக்கு அளித்த பிரத்தியேகச் செவ்வியில் தெரிவித்தார்.

**கேள்வி :-** நோய்முற்றிய பின்பே சிகிச்சைக்கு வரும் புற்றுநோயாளர் தொகை அதிகரிக்கக் காரணம் என்ன?

**பதில் :-** வடபகுதி மக்களைப் பொறுத்த வரையில் அண்மைக் காலத்திலேயே புற்றுநோய் பற்றி அறிந்துள்ளனர் முற்பட்ட காலங்க்ளில் புற்றுநோயை என்ன நோய் என அறியாததனால் அந் நோய்க்கு இலக்கானவர்கள் இறந்திருக்கிறார்கள்.

ஆனால் தற்போது இங்கு புற்றுநோய் பற்றி அறியக்கூடிய வசதிகள் மக்களுக்கு உள்ளதால் தற்போது தான் புற்றுநோய் இங்கு அதிகம் பரவுவது போன்ற தோற்றப்பாட்டைக் காட்டுகிறது.

> புற்றுநோய் சிகிச்சை நிலையத்தை இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள வைத்திய சாலையில் வைத்துக்கொண்டு மக்களுக்குப் பூரண சிகிச்சை வழங்க முடியாது.

இதேபோல புற்றுநோயால் பாதிக்கப் படுபவர்கள் இறந்து போகும் நிலை அதிகரிப்பதற்குக் காரணம் நோய் முற்றிய நிலையில் சிகிச்சைக்கு வருவதேயாகும்.

**கேள்வி :-** புற்றுநோய் ஏற்படுவதற்கு உணவு மற்றும் பழக்கவழக்கங்களும் காரணமா? இதனைத் தவிர்ப்பது எப்படி?

**பதில் :-** புற்றுநோய் ஏற்பட உணவுப் பழக்கவழக்கங்களும் ஒரு காரணமாகிறது. புற்றுநோயை உணவு பழக்க வழக்கங்களால் தவிர்ப்பதற்கு அதிகம் நார்த்தன்மையான உணவுகளை மக்கள் பயன்படுத்தவேண்டும். ஆனால் இன்று எம்மவர்கள் மேற்கத்தேய நடைமுறைகளைப் பயன்படுத்துகிறார்கள் இதுவும் புற்று நோய்த் தாக்கம் அதிகரிக்க ஒரு காரண மாக உள்ளது.

இதைவிட புகைப்பிடித்தல், மதுபான அருந்துதல், பாக்கு, வெற்றிலை, சுண்ணாம்பு, புகையிலை போன்றவற்றை மெல்லுதல் போன்றன அதிகரித்திருப்பதும் ஒரு காரணம்.

எமது கிராமங்கள் பல நகரமயமாக்கலுக்குட்பட்டு இயந்திர பாவனைகள் அதிகரித்திருப்பதால் ஏற்பட்டுள்ள சூழல் மாசடைதல்களின் விளைவாகவும்.

இதைவிட விவசாயிகள் பயிர்களுக்கு வீசிறும் கிருமி நாசினிகள் செயலிழக்கு முன்னர் அறுவடை செய்து மக்கள் பாவனைக்கு விடுதலும் இதற்குப் பிரதான காரணமாகும்.

இதைவிட எம்மவர்களிடையான நுளம்புத் திரிப்பாவனையும் புற்றுநோய்த் தாக்கம் ஏற்படக்காரணமாகிறது என ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது.

**கேள்வி :-** யாழ்.போதனா வைத்திய சாலையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள புற்று நோய் சிகிச்சைப்பிரிவின் செயற்பாடு எவ்வாறு இருக்கிறது?

**பதில் :-** தற்போது யாழ்.போதனா வைத்தியசாலையில் ஆண்களுக்கு 9 படுக்கை வசதிகளுடனும் பெண்களுக்கு 10 படுக்கை வசதிகளுடனும் கூடிய புற்று நோய் உள்ளகச் சிகிச்சைப் பிரிவு ஒன்றை ஆரம்பித்துள்ளோம்.

கடந்த ஆண்டு டிசம்பர் 22 ஆம் திகதி இந்த சிகிச்சைப்பிரிவை ஆரம்பித்தோம் இது வடபகுதியில் முதல் தடவையாக ஆரம்பிக்கப்பட்டுள்ள பல்துறைசார் உள்ளக புற்றுநோய் சிகிச்சைப் பிரிவாகக் காணப்படுகிறது.

எனினும் கொள்ளளவிற்கு அதிகமான புற்றுநோயாளர்கள் சிகிச்சைகளுக்காக வந்துகொண்டிருப்பதால் சிகிச்சையாளர் சம்பந்தமான நிபுணத்துவ வசதியை அதிகரிக்க வேண்டிய தேவை காணப்படுகிறது. இதைவிட எமது சிகிச்சைப் பிரிவில் இடவசதி பற்றாக் குறை யாக உள்ளதனால் இடவசதிகளும் பெருப்பிக்கப்படவேண்டிய அவசியப்பாடு உள்ளது. இதற்காக நாம் பணிப்பாளருடன் தொடர்பு கொண்டுள்ளோம் அதற்கு அவர் புற்றுநோய் சிகிச்சைப்பிரிவை விஸ் தரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக் கப்படும் என உறுதியனித்துள்ளார்.

**கேள்வி :-** தெல்லிப்பழை வைத்திய சாலையிலும் யாழ்.போதனா வைத்திய சாலையிலும் புற்றுநோய் சிகிச்சைகள் இடம்பெறுவதற்கு இரு வைத்தியசாலைகளும் சிகிச்சை நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு தருகின்றனவா? அவ்வவ் வைத்தியசாலைகளில் சிகிச்சைக்கான ஒத்துழைப்புகள் எவ்வாறு உள்ளன?

**பதில் :-** எமது சிகிச்சைப் பிரிவைப் பொறுத்த வரையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் புற்றுநோய் சிகிச்சைக்கான வசதிகள் இருப்பினும் சில மருந்து வகைகளை நான் நேரடியாக அரச மருந்து வழங்கல் பிரிவிற்குச் சென்று அவற்றைப் பெற்று வந்தேன். இதற்கு யாழ். மருத்துவமனை உயரதிகாரிகள் ஒத்துழைப்பு வழங்கினர்.

ஆனால் தெல்லிப்பழை வைத்தியசாலையை பொறுத்தவரையில் புற்றுநோய் சிகிச்சைக்கான உரிய வசதிகள் இன்னும் செய்து தரப்படவில்லை. எதிர்காலத்தில் அங்கு ஒரு புற்றுநோய் சிகிச்சை விடுதியுடன் கூடிய புற்றுநோய் வைத்தியசாலை ஒன்றை நிறுவ முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றனவெனினும் அவ் வைத்தியசாலை நவீன கதிர்ச்சிகிச்சை இயந்திரங்களுடன் கூடியதாக அமைய வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு. இதைவிட அங்கு சிகிச்சைகளை மேற்கொள்வதற்கான தாதிமார்களின் எண்ணிக்கைகளும் மிகக் குறைவு.

> புற்றுநோயை உணவுப் பழக்க வழக்கங்களால் தவிர்பதற்கு அதிகம் நார்த்தன்மையான உணவுகளைப் பயன்படுத்த வேண்டும். புகை பிடித்தல், மதுபானம் அருந்தல், பாக்கு, வெற் றிலை, சுண்ணாம்பு, புகையிலை மெல்லல் போன்றனவற்றுடன் இயந்திரப் பாவனை அதிகரித் துள்ளதால் ஏற்படும் சூழல் மாசடைதல் மற்றும் பயிர்களுக்கு விசிறிய கிருமிநாசினிகள் செயலிழக்க முன் அவற்றைப் பாவித்தல் போன்றனவற்றால் புற்றுநோய் ஏற்பட வாய்ப்புண்டு

எனவே, தற்போதுள்ள நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் புற்றுநோய் சிகிச சைசப்பிரிவை இயக்குவதே உகந்தது. மாறாக சடுதியாகவே தெல்லிப்பழையில் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவை ஆரம்பிக்க முற்படுவது சிறப்பானதாக அமையாது.

**கேள்வி :-** கடுமையாகப் பாதிக்கப் பட்ட புற்றுநோயாளர்களை வைத்து பராமரிப்பதற்கு ஏதாவது ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளனவா?

**பதில் :-** புற்றுநோயாளர்களை பராமரிப்பதற்கான ஒருநிலையத்தை உருவாக்க கலாநிதி ஆறு திருமுருகன் இணுவிலில் உள்ள வீடொன்றுடன் கூடிய தனது காணியை அன்பளிப்புச் செய்துள்ளார்.

இந்த இடத்தில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களை இறுதிக்காலத்தில் வைத்து சிகிச்சையளிப்பதற்கான நிலையம் அமைக்கப்படவுள்ளது. இதற்கு கேன் (Cane) என்ற நிறுவனமும் உதவி வழங்க முன்வந்துள்ளது.

(தொடரும்)

# ஈராக்கிலிருந்து படைகள் வாபஸ் அடுத்த ஆண்டிலிருந்து ஆரம்பம்

## -ஈராக் தேசிய பாதுகாப்பு ஆலோசகர்

(வோஷிங்டன்)

ஈராக்கில் இருந்து அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டுப் படைகள் வாபஸ் பெறுவது அடுத்த ஆண்டு முதல் படிப்படியாகத் தொடங்கும்.

இது குறித்து சிஎன்என் தொலைக்காட்சிக்கு அளித்துள்ள பேட்டியில் ஈராக் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் மொ.ஃபாக் அல்-ரூபையா கூறியதாவது,

அடுத்த ஆண்டின் முதல் பாதியில் ஈராக்கில் இருந்து அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டுப் படைகளில் ஒரு பகுதி நாடு திரும்பும் என நம்புகிறேன்.

ஈராக்கில் தீவிரவாத ஒழிப்பு மற்றும் ஈராக் படைகளுக்கு ஆயுதப் பயிற்சிகளை மேற்கொள்ளும் பணிகளைப் பொறுத்தே எந்த அளவுக்குப் படை வாபஸ் பெறப்படும் என்பது தீர்மானிக்கப்படும் என்றார்.

இந்நிலையில் ஈராக்கில் தீவிரவாதத் தாக்குதல்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ற)


### புதிய டீன் நியமனம்

(வத்திக்கான்)

கர்தினால்கள் அவையின் புதிய டீன் ஆக வத்திக்கானில் 2ஆவது முக்கிய நபராகக் கருதப்படும் ஏஞ்செலோ சொடானோ நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய போப்பாண்டவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்பு ஜோசப் ரட்ஸிங்கர் (போப் பதினாறாம் பெனடிக்ட்) இப் பதவியில் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற)

## WORLD NEWS உலக தரிசனம்



ஒரு பெண்ணின் முகம் மட்டுமே தெரிய பின்னே பல கைகள் விரிந்திருக்கும் 'புத்திஸ்தவா' என்ற இந்த அழகிய நடனம் கிழக்கு சீனாவில் பிரபலமாகும்.

# ஐ. நா சபைக்கு அருகே மாபெரும் எதிர்ப்புப் பேரணி

(நியூயோர்க்)

அணு ஆயுதங்கள் வேண்டாம், போர் வேண்டாம் என்ற முழக்கங்களுடன் அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் ஐ.நா சபை அருகே கடந்த ஞாயிற்றுக்கிழமை மாபெரும் அணு ஆயுத எதிர்ப்பு, போர் எதிர்ப்புப் பேரணி நடைபெற்றது.

ஐ.நா.சபை அமைந்துள்ள சாலை வழியாக நடந்த இப் பேரணி அருகேயுள்ள மத்திய பூங்காவில் முடிவடைந்தது.

பேரணியில் பங்கேற்ற அனைவரும் அங்கு அமைதிச் சின்னத்தின் வடிவத்தில் அணி வகுத்து நின்றனர். இனியொரு ஹிரோஷிமா, இனியொரு நாகசாகி வேண்டாம் என்று முழக்கமிட்டனர்.

இந்தப் பேரணியில் 40 ஆயிரம் பேர் கலந்து கொண்டதாக இதன் அமைப்பாளர்கள் தெரிவித்தனர். மத்திய பூங்காவில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் ஹிரோஷிமா நகர மேயர் தடதோஷி அகிபா கலந்துகொண்டு பேசியதாவது,

ஹிரோஷிமா - நாகசாகியில் அணுகுண்டு தாக்குதலில் தப்பி உயிர் பிழைத்தவர்கள் தான் உலகில் அணு ஆயுதப் போரின் கொடுரத்தை நேரடியாக உணர்ந்தவர்கள்.

1945இல் அவர்கள் அனுபவித்த வேதனையை மீண்டும் உலகில் எவரும் அனுபவிக்ககூடாது. அதற்காக நாம் அனைவரும் இணைந்து போராட வேண்டும் என்றார்.

1945ஆம் ஆண்டு அணுகுண்டுத் தாக்குதலில் உயிர் தப்பிய ஹிரோஷிமா நகரைச் சேர்ந்த சுனவோ சுபாய், அப்போது அவர் 20 வயது கல்லூரி மாணவர். மொழிபெயர்ப்பாளர் உதவியோடு அவர் தனது கொடிய அனுபவத்தைக் கூட்டத்தினருக்கு விவரித்தார்.

அணுஆயுதப் பரவல் தடுப்பு ஒப்பந்தம் குறித்து ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் மறு ஆய்வுக் கூட்டம் ஐ.நா. சபையில் திங்கட்கிழமை தொடங்கியது.

அணு ஆயுதம் வைத்திராத நாடுகள் அவற்றைத் தயாரிக்காமல் இருக்க உறுதி அளிக்கவும், அணு ஆயுதம் வைத்துள்ள அமெரிக்கா, ரஷியா, பிரிட்டன், பிரான்ஸ், சீனா ஆகிய நாடுகள அவற்றை அழிப்பதை நோக்கி நடவடிக்கைகளை மேற்கொள்ள உறுதியளிக்கவும் இந்த ஒப்பந்தம் வலியுறுத்துகிறது. (ற)

# அடுத்தடுத்து 5 தடவைகள் ஜப்பானில் நிலநடுக்கம்

(டோக்கியோ)

ஜப்பானில் கடந்த திங்கட்கிழமை அதிகாலையில் குறைந்த நேர இடைவெளியில் அடுத்தடுத்து ஐந்து முறை நிலநடுக்கம் ஏற்பட்டது.

ஜப்பானின் தெற்குப் பகுதியில் உள்ள கொய்சுமி தீவில் அதிகாலை ஒன்றரை மணி அளவில் முதல் நிலநடுக்கம் உணரப்பட்டது. இது ரிக்டர் கருவியில் 4.9ஆகப் பதிவாகியிருந்தது.

இதன் தொடர்ச்சியாக குறைந்த் இடைவெளியில் அடுத்தடுத்து நான்கு முறை நிலநடுக்கம் ஏற்பட்டது. இவை அன்னத்தும் ரிக்டர் கருவியில் பதிவாகியுள்ளன.

கடந்த மார்ச் மாதம் 20ஆம் திகதி புகுவோகா பகுதியில் ஏற்பட்ட கடும் நிலநடுக்கத்தின் தொடர் நிகழ்வாகத்தான் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டதாக வானிலை ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.

இந்த நிலநடுக்கத்தினால் வீடுகள் கட்டடங்கள் அதிர்ந்தன. இதனால் மக்கள் பீதியடைந்துள்ளனர். (ற)

### துருக்கியில் நிலநடுக்கம்

(அங்காரா)

துருக்கியின் கொரம் மாநிலத்தில் கடந்த சனிக்கிழமை லேசான நிலநடுக்கம் ஏற்பட்டது. இதன் அளவு 4.7 ரிக்டர் எனப் பதிவானதாக பூகம்பப் பதிவு மையம் தெரிவித்தது.

இதேவேளை உஸ்மானிக் என்ற இடத்தில், பூகம்ப செய்தி கேட்டு பீதியடைந்த 25 வயதுப் பெண், மாரடைப்பால் இறந்துள்ளார். (ற)

# சிக்கலில் ரொனி பிளேயர்

பிரிட்டன் பிரதமர் ரொனி பிளேயர் ஈராக் போர் தொடர்பான உண்மைகளை மக்களிடம் மறைத்து விட்டார் என்ற குற்றச்சாட்டு கடந்த சில நாட்களாக பிரிட்டன் முழுக்க தீவிரமாக விவாதிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் பிரிட்டனில் வெளிவரும் பிரபல நாளிதழான பிரிட்டிஷ் சண்டே செய்தியை ஆதாரத்துடன் வெளியிட்டுள்ளது.

ஈராக் மீது 2003 ஆம் ஆண்டு போர் தொடுப்பதற்கு 9 மாதங்களுக்கு முன்பே, அமெரிக்க அதிபர் ஜோர்ச் புஷ்ஷும் ரொனி பிளேயரும், ரகசியமாகச் சந்தித்துப் பேசி, சதாம் உசேனை வழ்த்துவதற்கான வழிமுறைகளை விவாதித்தனர் எனபதற்கான அதிகாரபூர்வமான ஆவணங்களை அந்நாளிதழ் வெளியிட்டுள்ளது.

நாளை பொதுத்தேர்தலைச் சந்திக்கும் ரொனி பிளேயருக்கு இச்செய்தி பெரிதும் சிக்கலை உண்டாக்கியுள்ளது என அரசியல் பார்வையாளர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். (ற)

### ஆப்கானில் குண்டுவெடிப்பு 2பேர் பலி; 8பேர் படுகாயம்

(காந்தஹார்)

ஆப்கானிஸ்தானில் தீவிரவாதிகள் வைத்த குண்டு வெடித்து 2 பொலிசார் உயிரிழந்ததுடன் 8பேர் காயமடைந்துள்ளனர்.

காந்தஹார் அருகில் ஷாவாலி காட் பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த பொலிஸ் வாகனம் அருகில் இந்தக் குண்டுவெடிப்பு ஏற்பட்டது. ரிமோட்கன்ட்ரோல் மூலம் குண்டை தீவிரவாதிகள வெடிக்கச் செய்துள்ளனர். (ற)

# இதுவரை கண்டிராத அதிசயம்

(சென்னை)

வேலூர் மாவட்டம் திருப்பத்தூர் பகுதியில் பெய்த திடீர் ஆலங்கட்டி மழையின் போது 25கிலோ எடையுடைய பனிக்கட்டிகள் விழுந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

திருப்பத்தூரில் நேற்று முன்தினம் மாலை திடீரென சூறாவளிக்காற்றுடன் ஆலங்கட்டி மழை பெய்தது. அப்போது டாமளேரி, முத்தூர் பட்டேரி, வைரகன் வட்டம், ஔவையப்பன் நகர் உள்ளிட்ட பகுதிகளை 4 கிலோ மீற்றர் தூரத்துக்கும் சுமார் 25 கிலோ எடையுள்ள பனிப்பறைகள் வானத்திலிருந்து விழுந்தன.

விளைநிலங்களில் வீழ்ந்தவுடன் இந்தப் பாறைகள் துண்டு துண்டாக உடைந்தன. இதனால் காஷ்மீர் பகுதிகளில் காணப்படுவது போல இந்தப் பகுதிகளிலும் பனிபடர்ந்திருந்தது. இந்தப் பனிக்கட்டிகளை வைத்துச் சிறுவர்கள் விளையாடி மகிழ்ந்தனர்.

திருப்பத்தூர் பகுதியில் முதல் முறையாக பெய்த இந்தப் பனிப்பாறை மழை அப்பகுதி மக்களிடையே பெரும் பரபரப்பாகப் பேசப்பட்டது. இதேபோல வானியம்பாடியிலும் நேற்று முன்தினம் மாலை ஆலங்கட்டி மழை பெய்தது. (ற-5)

# காஷ்மீரில் 4 மாதங்களில் 175 தீவிரவாதிகள் சுட்டுக் கொலை

(ஸ்ரீநகர்)

காஷ்மீரில் கடந்த 4 மாதங்களில் சுமார் 175 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்தியா - பாகிஸ்தான் இடையே அமைதிப் பேச்சு நடந்து வருகிறது. இரு நாட்டு மக்கள் தொடர்பை இரு நாடுகளும் ஊக்குவித்து வருகின்றன. அதேநேரத்தில் பாதுகாப்புப் படையினர் தீவிரவாதிகளை வேட்டையாடுகிறார்கள்.

கடந்த 4 மாதத்தில் 175 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். அவர்களில் 40 பேர் தங்களை மாண்டர்கள் என்று அறிவித்தவர்கள. ஹிஸ்புல் முஜாகுதீன் இயக்க தீவிரவாதிகள் முதுகெலும்பு முறிக்கப்பட்டது. அதனால் அந்த இயக்கத்தினர் போர் நிறுத்தம் பற்றி ஆலோசிக்கத் தயார் என்று அறிவித்துள்ளனர். (ற)

# அமெ.வுக்கு அதிர்ச்சி வைத்தியம்

குறுகிய தூரம் செல்லும் ஏவுகணையை வடகொரியா கடந்த ஞாயிற்றுக்கிழமை ஜப்பான கடற்பகுதியில் சோதனை செய்ததாக அமெரிக்கா தகவல் வெளியிட்டுள்ளது.

100 கிலோமீற்றர் தூரம் செல்லக்கூடிய ஏவுகணைகளையும், ஜப்பானைச் சென்று தாக்கும் தூர ஏவுகணைகளையும் வடகொரியா ஏற்கனவே பலமுறை சோதித்துள்ளது.

அத்துடன், விரைவில் அணு ஆயுதங்களை ஏந்திச் செல்லக்கூடிய ஏவுணைகளை சோதனை செய்யப்போவதாக வடகொரியா அறிவித்துள்ளதால், வடகொரியாவின நடவடிக்கைகளை ஜப்பான் உன்னிப்பாகக கண்காணித்து வருவதாக அந் நாட்டு வானொலி தெரிவித்துள்ளது.

வடகொரியா மீது எந்தவித நடவடிக்கை எடுக்கலாம் என ஆலோசித்து வருவதாகவும் அமெரிக்க உயரதிகாரி அனதிகா தெரிவித்தார். (ற)

# அதிகாரத்தோடு மட்டுமே பதவி வேண்டும் -கொய்சுமி

ஐ.நா பாதுகாப்பு மன்றத்தில் புதிதாக நிரந்தர உறுப்பினர்களைச் சேர்க்கும் போது அனைத்து உறுப்பு நாடுகளுக்கும் வீட்டோ எனப்படும் ரத்து அதிகாரம் வழங்கப்படவேண்டும். அதில் எந்த பராபட்சமும் காட்டக்கூடாது எனவும ஜப்பான் பிரதமர் கொய்சுமி கூறியுள்ளார்.

சில தினங்களுக்கு முன் இந்தியா வந்த ஐ.நா பொதுச் செயலாளர் கொபிஅனான் வீட்டோ அதிகாரம் குறித்து உறுதியான பதிலளிக்காததால், இவ்விஷயத்தில் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

இவ்விஷயம் குறித்து இந்தியப் பிரதமருடன் ஏற்கனவே தாம் பேச்சுவார்த்தை நடத்தியிருப்பதாக கொய்சுமி குறிப்பிட்டார்.

தற்போது பாகிஸ்தானில் பயணம் மேற்கொண்டுள்ள கொய்சுமி ஐ.நா மன்றத்தில் இந்தியாவுக்கு நிரந்தர உறுப்பினர் அந்தஸ்து அளிப்பதற்கு எதிர்ப்புக் காட்ட வேண்டாம் என பாகிஸ்தான அரசிடம் வற்புறுத்தியுள்ளார். (ற)

# டைட்டானிக் கப்பலிலிருந்து மீட்கப்பட்ட பொருட்கள் ஏலம்

டைட்டானிக் கப்பலில் இருந்து மீட்கப்பட்ட தங்கக் கடிகாரம் ஏலம் விடப்பட்டது. டைட்டானிக் சொகுசுக் கப்பல் கடலில் மூழ்கியழிந்தாலும் வரலாற்றில் அழியாமல் நிலை பெற்றுவிட்டது. 1912ஆம் ஆண்டு ஏப்ரல் 14,15 ஆம் திகதிகளில் வடக்கு அட்லாண்டிக் சமுத்திரத்தில் மூழ்கியது இந்தக் கப்பல். இதில் 1500 பயணிகள் நீரில் மூழ்கி உயிரிழந்தனர். உயிர் காக்கும் படகுகளில் ஏற்றப்பட்டவர்கள் உயிர் பிழைத்தனர். இதில் நம்பர் 10 படகில் ஏறி உயிர் தப்பியவர் நோரா கன.

அயர்லாந்திலுள்ள லிமறிக் கவுண்டியைச் சேர்ந்தவர். இவர் அமெரிக்காவிலுள்ள பென்சில்வேனியா மாநிலம் ஹேரிஸ் பர்க்கில் குடியேறினார். பிறகு அயர்லாந்தில் உள்ள தனது தாயாரை பார்த்துவர நான்கு மாதகாலம் அயர்லாந்து வந்து தங்கினார்.

டைட்டானிக் கப்பல் அதன முதல் கடல பயணத்தைத் தொடங்கியபோது அதில் ஏறி அமெரிக்கா பயணமானார். அப்போது 18 கரட் தங்கத்தாலான பொக்கெட் கடிகாரத்தை மகன் நோராவுக்கு தாயார் பரிசாக வழங்கி வழியனுப்பினார்.

இந்த கடிகாரம் உள்ளிட்ட பொருட்கள் இப்போது ஏலம் விடப்பட்டன. ரூபா 65 இலட்சத்துக்கு கடிகாரம் ஏலம் போனது. அதுபோல 1912 ஏப்ரல் 14திகதியிடப்பட்ட கப்பலின் 3 வகுப்பு உணவு மெனு அட்டை ரூபா 19லட்சத்துக்கு ஏலம் போனது. இந்த மெனு அட்டையில் இது ஒன்றே ஒன்றுதான் மீட்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான
தாங்காது மன்னோ பொறை- குறள்

வலம்புரி

# சரியான முடிபு

இலங்கையில் தொடரும் இனப்பிரச்சினையை தீர்த்து வைக்கின்ற மனோநிலையும் பக்குவமும் இலங்கை அரசியல்வாதிகளுக்கு இல்லை என்பது வெளிப்படையான உண்மை நிலை.

இலங்கையின் அரசியல்வாதிகள் தமது நலனையும் பதவிநிலைப்பையும், சுகபோகத்தையும் அனுபவிக்கவே அரசியல் கதிரையை எட்டிப்பிடிக்க ஆர்வப்படுகின்றனர். இவர்களின் வாயில் இருந்து உதிர்கின்ற நாட்டைப்பற்றியதும் மக்களைப்பற்றியதுமான வார்த்தை ஜாலங்கள் மக்களை தம்பக்கம் கவர வீசும் துரும்புகளாகும்.

வாய்வீச்சும் வம்பளப்புமே அரசியல்வாதிகளின் பிழைப்பாகி தொடருவதால் நாட்டுக்கும் மக்களுக்கும் அவசியமான நடவடிக்கைகள் செயலுருப்பெறாமலே போகின்றன. விமர்சனம் என்பதும், கருத்துவெளியிடல் என்பதும் ஜனநாயக அடிப்படை அம்சங்கள் தான், ஆனால் இவற்றோடு செயலுருப்பெறுகின்ற வாழ்க்கைக்கு யதார்த்தமான செயற்பாடுகளும் சேர்ந்திருக்கவேண்டும்.

மாறாக வாய் ஜம்பம் மாத்திரம் ஜனநாயகம் ஆகாது. இத்தகைய துரதிஷ்டமான வாய்ஜம்பமே தென்னிலங்கை அரசியலில் ஒருவர் மாறி இன்னொருவர் எனதொடருவதால் நாட்டில் எது அவசியம் தேவை என்பதே மறைந்து போய் மறந்துவிட்டது.

தமது அரசியல் பாரம்பரியத்தையும் குடும்பசெல்வாக்கையும் மாத்திரம் மாறிமாறி கூறிக்கொண்டு கிளப்புகின்ற அரசியல் சர்ச்சைகளே பிணக்குகளாக உருவெடுக்கின்ற தேதவிர நர்ட்டின் அத்தியவசிய விடயங்கள் குறித்து எவரும் கவனிப்பதாகவோ தீர்க்கப்படுவதாகவோ இதுவரை தெரியவில்லை. இத்தகைய அரசியல் விளையாட்டு தென்னிலங்கையின் பிரதான அரசியல் கட்சிகளுக்கிடையே தொடர்கின்றது. இத்தொடர்ச்சியின் விளைவு நாட்டின் சமாதானம், இனமோதல் தீர்வு என்பவற்றிலும் தொடர்வதால், இலங்கையின் இனப்பிரச்சினையை தீர்வு நோக்கி அசைக்கமுடியாதுள்ளது.

இந்நிலைமையை தென்னிலங்கையில் எந்தக்கட்சி அரசகட்டிலில் ஏறினாலும் அசைக்கமுடியாது என்பது தான் யதார்த்தமான உண்மை. எனவே சமாதானம் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பனதொடர்பில் தென்னிலங்கை அரசுகள் ஓர் தீர்வுக்கு, அரச இயந்திரத்தையும் மக்களையும் நகர்த்தும் என்று எதிர்பார்ப்பது பகல் கனவாகவே அமையும்.

தென்னிலங்கையில் இவ்உண்மை நிலையை சர்வதேசசமூகம் மிக்த்தெளிவாக புரிந்துகொண்டுள்ளது. இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வுக்கு வரவேண்டுமானால் அரசாங்கத்திற்கும் தமிழீழவிடுதலைப்புலிகளுக்கும் இடையே நல்லுறவு, புரிந்துணர்வு, சமாதானம் உருவாக வேண்டும். இந்நிலைமை உருவாக இருதரப்புக்கும் இடையே சில முக்கிய விடயங்களில் கட்டமைப்புக்களில் இணக்கப்பாடு ஏற்படவேண்டும்.

அத்தகைய முக்கிய விடயங்களில் ஒன்றாகவே பொதுக்கட்டமைப்பு விடயம் அமைந்துள்ளது. இதில் இருதரப்புக்கும் இடையே ஓர் இணக்கப்பாடு எட்டப்படல் வேண்டும். ஆனால் இதுதொடர்பிலேயே தொடர்ந்தும் பிணக்கும் பூசல்களும் நெருக்கடியும் தொடர்கிறது. இந் நெருக்கடிக்கும் பிரச்சினைக்கும் காரணம் தென்னிலங்கை பிரதான அரசியல் கட்சிகளின் அரசியல் விளையாட்டுத்தான். இந்த உண்மை நிலைமை உணரப்பட்டதன் அடிப்படையில் இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளில் சில ஐரோப்பிய நாடுகள் இலங்கைக்கு உதவி வழங்குவதில் அழுத்தம் ஒன்றை பிரயோகிக்க முடிபு செய்திருகின்றன.

அதில் இலங்கை அரசுக்கும் தமிழீழவிடுதலைப்புலிகளுக்கும் இடையே பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட்டாலேயே உதவிவழங்கும் நாடுகளின் கூட்டத்தை நடாத்துவது எனவும் உதவியை வழங்குவதெனவும் இலங்கைக்கு அறிவித்திருக்கின்றன. சரியான முடிபை உதவி வழங்கும் நாடுகள் எடுத்திருக்கின்றன. நிச்சயமாக இது வரவேற்கத்தக்க முடிபுஆகும் இம் முடிவினால் முழிந்துகொண்டிருக்கும் அரசு இதற்கு பரிகாரம் தேட வழியொன்றை காணவேண்டும் .

அவ்வழி பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதாக அமைந்தால் இனப்பிரச்சினைதீர்வுக்கும் சர்வதேச அழுத்தமே அவசியம் என்பது நிருபணமாகும்.

# தமிழ்-முஸ்லிம் தலைவர்களின் ஒற்றுமையிலேயே இரு சமூகங்களினதும் எதிர்காலம் தங்கியுள்ளது

## பிரச்சினைகளில் ஒன்றிணைவு; தீர்வில் மட்டும் தனித்தனியா? என்கிறார் பஷீர் சேகுதாவுத் எம்.பி.

(ஏறாவூர்)

இலங்கையில் வாழும் தமிழ் ,முஸ்லிம் சமூகங்களின் தலைவர்கள் ஒற்றுமைப்பட்டு ஒரே குரலில் தமது கோரிக்கைகளை முன்வைத்தால் மட்டுமே இரு சமூகங்களின் பிரச்சினைகளுக்குமான தீர்வுகளினைப் பெற்றுக்கொள்ள முடியும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளரும பாராளுமன்ற உறுப்பினருமான பஷீர் சேகுதாவூத் தெரிவித்துள்ளார்.

ஏறாவூரில் நடைபெற்ற மேதினக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அக்கூட்டத்தில் உரையாற்றுகையில்,

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இரு தசாப்த காலத்திற்கும் மேலாக இடம்பெற்ற கோர யுத்தத்தினால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட அத்தனை பாதிப்புக்களும் முஸ்லிம் மக்களுக்கும் ஏற்பட்டன.

எனவே, பிரச்சினைகளுக்கான தீர்வு காணப்படுகின்ற போது இரு சமூகங்களையும் திருப்திப்படுத்தும் வகையில் அவை அமைய வேண்டும் அனைத்து அழிவுகளையும் எதிர்கொள்வதில் ஒற்றுமைப்பட்ட தமிழ்முஸ்லிம் மக்கள் பிரச்சினைகளுக்கான தீர்வினைப் பெற்றுக்கொள்ளும் போது மாத்திரம் பிரிந்து நின்று தனித்தனியாகச் செயற்படுவது மிகவும் வேதனைக்குரியது.

சுனாமி அனர்த்த நிவாரணப்பணிகளுக்காகப் பொதுக் கட்டமைப்பு ஏற்படுத்தப்படும் போது முஸ்லிம் மக்களுக்கும் சமமான அந்தஸ்து வழங்கப்படவேண்டும் என்றும் வேண்டுகோள்விடுத்தார். (ந-4)

# இலங்கை விடயத்தில் பாகிஸ்தான் அதீத அக்கறை; பின்னணியை ஆராயுமாறு ஷியாம் சரண் பணிப்புரை

(கொழும்பு)

இலங்கை விவகாரத்தில் அண்மைக்காலமாக பாகிஸ்தானின் அக்கறை அதிகரித்து வருவதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

குறிப்பாக சமாதானப் பேச்சுவார்த்தை இலங்கைக் கடற்படையின் பலத்தினை அதிகரித்தல் மற்றும் சுனாமி மீள் கட்டுமான,புனரமைப்பு நடவடிக்கை என்பவற்றில் பாகிஸ்தானின் அக்கறை அதிகரித்து வருகின்றது.

இலங்கைக்கு வருகை தந்த இந்திய வெளியுறவுத் துறைச் செயலர் ஷியாம் சரண் இலங்கை விவகாரத்தில் அதிகரித்துள்ள பாகிஸ்தானிய அக்றை குறித்து தனது சக அதிகாரிகளுடன் விரிவாக ஆராய்ந்துள்ளார்.

என்றுமில்லாதவாறு பாகிஸ்தான் இலங்கை விடயத்தில் கூடுதல் அக்கறை காட்டி வருவதன் பின்னணி குறித்து கூடுதல் கவனம் செலுத்துமாறு இந்தியத் தூதரக அதிகாரிகளுக்கு இவர் பணிப்புரை விடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கைக்கு எந்தவிதமான உதவிகளையும் எந்த நேரத்திலும் வழங்குவதற்கு பாகிஸ்தான் தயாராகவிருப்பதாக பாகிஸதானியத் தூதுவர் அண்மையில் தெரிவித்த கருத்துக்குக் குறித்தும் இந்தியத்தரப்பு அதிக கவனம் செலுத்தி வருவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பிராந்தியத்தில் மிக முக்கிய நாடாக இந்தியா இருக்கின்ற போதிலும் இலங்கை விடயத்தில் இந்தியாவின் தலையிடாத தனமை காரணமாக ஏனைய நாடுகள் இலங்கை வடயத்தில் தலையிடும் நிலை தோன்றியுள்ளதாகவும் விரைவில் இந்தியா தனது இலங்கை தொடர்பான புதிய நிலைப்பாடு குறித்து உத்தியோகப் பூர்வ அறிவித்தலை வெளியிடலாம் எனவும் தென்னிலங்கை அரசியல் அவதானிகள் எதிர்வு கூறியுள்ளனர். (ந-4)

# இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு இந்தியா தொடர்ந்தும் ஆதரவு வழங்கும்

(கொழும்பு)

நான்கு நாள் விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்திருக்கும் இந்திய வெளியுறவுத்துறைச் செயலர் ஷியாம் சரணுக்கும் இலங்கை வெளியுறவுச் செயலர் எச்.எம். ஜி.எஸ். பலிககறவிறகும் இடையில் நேற்று முன்தினம் சந்திப்பு ஒன்று இடம் பெற்றது.

இச் சந்திப்பில் பாதுகாப்பு விடயங்களும் சுனாமி நிவாரண புனரமைப்பு பணிகள் பற்றியும் கலந்துரையாடப் பட்டதாக இலங்கை வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் ஹிமாலி அருணாதிலக தெரிவித்தார்.

இலங்கையின் கிழக்குப் பிராந்தியத்திற்கும், இநதியாவின் தமிழ் நாட்டுக்குமிடையில் பலமான உறவுகள் காணப்படுகின்றன. கிழக்கில் கூடுதலாக தமிழ் மக்களே வாழ்ந்து வருகின்றனர்.

இலங்கைப் போராளிகளுக்கும்,இந்தியாவுக்குமான உறவு 1990இல் இந் தியப்படைகளை புதுடில்லி வாபஸ் வாங்கிக் கொண்டதிலிருந்து குறைவடையத்தொடங்கியது. 1987இல் இலங்கை- இந்திய ஒப்பந்தத்தின்படி படைகள் இங்கு அனுப்பப்பட்டிருந்தன.

தற்போது இலங்கை அரசுக்கும் புலிகளுக்குமிடையே போர் நிறுத்த உடன்படிக்கை அமுலில் உள்ளது. நோர்வே அனுசரணையுடனான சமாதான செயற்பாட்டிற்கு இந்தியா ஆதரவினை வழங்கி வருகிறது தொடர்ந்தும் ஆதரவு வழங்கும்.

இருப்பினும், அமெரிக்கா போன்றே இந்தியாவும் புலிகளை பயங்கரவாதப்பட்டியலில் இருந்து அகற்ற முடியாமல் இருந்து வருகிறது எனவும் இந்திய வெளியுறவுச் செயலர் குறிபபிட்டதாக பேச்சாளர் ஹிமாலி அருணாதிலக மேலும் தெரிவித்தார். (ந-4,6)

# பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்படும் பட்சத்தில் போராட்டமும் ஆர்ப்பாட்டங்களும் நடாத்தப்படும்

## சோமவன்ச அமரசிங்க

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் சுனாமி நிவாரணப்பொருட்களை பகிர்ந்தளிப்பதற்கான பொதுக்கட்டமைப்பொன்றினை வழங்குவதற்கு தமது கட்சி இடமளிக்காது என ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு கிடைக்கும் நிதியினை செலவிடுவதற்கு அரசாங்கத்திற்கு மாத்திரமே மக்கள் அதிகாரத்தை வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜே.வி.பியின் மேதினக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத்தெரிவித்தார்.

இருப்பினும் யார் எதிர்ப்புத்தெரிவித்தாலும் வடக்கு கிழக்கிற்கான நிவாரணங்களை பகிர்ந்தளிப்பதற்கு பொதுக் கட்டமைபபு ஒன்று நடைமுறைப்படுத்தவேண்டும் என ஜனாதிபதி அண்மையில் தெரிவித்திருந்தார். எனினும், அதனை நாம் முழுமையாக எதிர்க்கின்றோம்.நாங்கள் அதற்கு ஒரு போதும் இடமளியோம் எனவும் சோமவன்ச அமரசிங்க தெரிவித்தார்.

பொதுக்கட்டமைப்பு சமாதானத்திற்காக அல்ல. தற்போது இந்தப பொதுக்கட்டமைப்பு அநாதரவான, நியாயமான சூழலுடன் வருகின்றது.

வடக்கு-கிழக்கு மக்கள் சுனாமியினால் பாதிக் கப்படடுளளதாகத் தெரிவிக்கின்றனர். அவர்களுக்கு நிவாரணங களை வழங்குவதற்காக விடுதலைப்புலிகள் அமைப்புடன் இணைந்து செயற்பட பொதுக்கட்டமைப்பு ஒன்று இல்லை. இத னைச் செய்ய முடியாது என நாம் தொளிவாகக்கூறினோம்.

நாம இந்த நாட்டில் பணத்தினைச் செலவிடும்போது கவனத தில கொள்ளவேண்டியது அது மக்களின் நிதி. வெளிநாடுகளில் இருந்து கிடைக்கலாம். வேறு அமைப்புகளிடமிருந்தும் நிதி கிடைக்கலாம். நாட்டுமக்களின் பணமும் இதில் உள்ளது. இந்நிலையில் ஒவ்வொரு சதத்தினையும் செலவிடும் உரிமையை அரசாங்கத்திற்கே நாட்டு மக்கள் வழங்கியுள்ளனர்.

சட்டவிரோத,பயங்கரவாத அமைப்புடன் இணைந்து இந்த பணத்தினை செலவிட அரசாங்கத்திற்கு உரிமைஇல்லை. எனவே ,நிவாரணங்களுக்காக பணத்தினைச் செலவிடுவதாயின பொதுக்கட்டமைப்பொன்றினை நிறுவாமல் அதுவும் விடுதலைப் புலிகளுடன் இணைந்து செயற்படமால் அரசாங்கம் தனியாகவே செயற்படவேண்டும்.

இதனையும் மீறி ஜனாதிபதி செயற்படுவாராயின் உடனே அரசை விட்டு விலகுவதோடு,உண்ணாவிரதப் போராட்டங் களையும் ஆர்ப்பாட்டங்களையும் தொடர்ச்சியாக மேற்கொள்வோம் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (ந-4)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

ஏற்கனவே நன்றாகப் பக்குவப்பட்டிருக்கும் நிலையிலுள்ள அரிதான சிலருக்கு வெளியே குரு என்று ஒருவர் தேவையில்லை அவர்கள் நேரிடையாகவே உள்ளொளி மூலம் ஆன்ம விளக்கம் பெறமுடியும். ஆனால் இத்தகையவர்கள் மிகவும் அபூர்வமாகவே உள்ளனர்.

சுவாமி விவேகானந்தர்

# உண்மைக் கருத்துக்களை வெளியிடும் போது ஊடகவியலாளர்கள் கொல்லப்படுகின்றனர்

## ஐ.நா.செயலர் கொபி அனான் தெரிவிப்பு

(கொழும்பு)

உலக ஊடக சுதந்திர தினத்தை முன்னிட்டு ஐ.நா.செயலாளர் நாயகம் கொபிஅனான் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, தமது கருத்துக்களை உண்மைகளை வெளியிடும் போது ஊடகவியலாளர்கள் கொல்லப்படுகின்றனர். கொல்லப்பட்ட, துணிச்சலுடன் செயல்பட்ட ஊடகவியலாளர்களுக்கும் மரியாதை செலுத்துவோம் என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர்கள் சொற்களாலும் படங்கள் மூலமாகவுமே தம்மைவெளிப்படுத்துபவர்கள். அதனாலேயே ஊடகவியலாளர் தாக்கப்பட்டுள்ளார்கள். சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள் கொலை செய்யப்பட்டுள்ளார்கள், ஊடகவியலாளர்களை பாதுகாக்கும் குழுவின் அறிக்கையின் படி 2004ல் மட்டும் 56 ஊடகவியலாளர்கள் கடமையின் போது கொல்லப்பட்டுள்ளார்கள்.19பேர் காணாமல் போயுள்ளனர் கொலை அச்சுறுத்தலுக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளார்கள். 124பேர்சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள்.

உலக ஊடக சுதந்திரதினத்தன்று நாம் தமது குரல்கொடுத்தமைக்காக கொல்லப்பட்டும் பலியானவர்களுக்கும் மரியாதை செலுத்துவோம். உண்மைகளை எடுத்துரைத்தமைக்காக கொல்லப்பட்டவர்களை நினைவுகூருவோம்

ஊடகத்துறையின் பங்களிப்பை நினைவுகூரும் நாளாகவும் இது அமைகிறது சகல மக்களுக்கும் சுதந்திரத்தை வழங்கும் பிரதான ஊடகமாக, ஊடகசுதந்திரம் விளங்குகிறது. இந்த அத்தியாவசியமான மனித உரிமைகளுக்கான எமது அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிபடுத்திக்கொள்வோம் இவ்வாறு கொபி அனானின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச.6)

### மட்டக்களப்பு ஏறாவூரில்

# துப்பாக்கிச் சூட்டு காயங்களுடன் நேற்று இளைஞனின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு ஏறாவூர் கிரானில் துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் இளைஞர் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது. பிரஸ்தாப இளைஞனின் சடலம் ரி.சேட்டும் சாரமும் அணிந்த நிலையில் கைகள், கண்கள், கால்கள் கட்டப்பட்ட நிலையில் தலையிலும் மார்பிலும் துப்பாக்கிச்சூட்டுக்காயங்களுடன் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இளைஞனின் சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர். சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இக்கொலைச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிகவிசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(ச-8)

# ரவூவ் ஹக்கீமுக்கு எதிராக உச்சநீதிமன்றில் மனுத்தாக்கல்

(கொழும்பு)

கட்சியின் உறுப்புரிமையில் இருந்து தன்னை ரத்துச்செய்வதற்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எடுத்துள்ள தீர்மானம் சட்டத்திற்கு முரணானது என கோரிமட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி புனரமைப்பு அமைச்சர் அமீர்அலி நேற்று உயர் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்துள்ளார்.

ஏப்ரல் மாதம் 4ம் திகதியில் இருந்து கட்சியின் உயர்பீடம் தன்னைக் கட்சியில் இருந்து விலக்குவதற்கு தீர்மானம் எடுத்துள்ளது, முறையான ஒழுக்காற்று விசாரணைகள் இன்றி தன்னை கட்சியில் இருந்து விலக்குவதற்கும் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை ரத்துச்செய்வதற்கும் முஸ்லிம் காங்கிரஸ் எடுத்துள்ள தீர்மானம் சட்டத்திற்கு முரணானது என அம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இம்மனுவில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூவ் ஹக்கீம், செயலாளர் ஹசன்அலி, பாராளுமன்ற செயலாளர், தேர்தல் ஆணையாளர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர். (ச-8)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 5 ஆயிரம் ரூபா வீதம் வழங்க உலகவங்கி உதவி

## வதிவிடப்பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட் தெரிவிப்பு

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தின் போது பாதிக்கப்பட்ட இடம்பெயர்ந்த ஒவ்வொரு குடும்பங்களுக்கும் ஐந்து ஆயிரம் ரூபாவீதம் கொடுப்பனவு வழங்க உலகவங்கி 35மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கி இருப்பதாக உலகவங்கியின், இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், இந்நிதி உதவியினை வழங்கிய தன் பிரதான நோக்கம் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களின் பொருளாதார இயல்பு வாழ்க்கையை சுமுகநிலைக்கு கொண்டுவருவதே ஆகும். இந்நிதியுதவியை வழங்குவதன் மூலம் மக்களின்வாழ்வு மேம்பாடு அடையும். சுனாமியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அமுல்படுத்தப்படும் பிரதான துறைகள் பலவற்றுக்கு தொடர்புடைய திட்டங்களில் ஒன்றாகவே இடம்பெயர்ந்தோருக்கு ஐந்து ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படுகின்றது.

இம் மாநாட்டில் உரையாற்றிய உலகவங்கியின் பல்நாட்டு முதலீட்டு நிறுவன நிறைவேற்று அதிகாரி பீ.யு.சீ.ஒமோசா இலங்கையை கட்டியெழுப்பும் முயற்சிக்கு தாம் முழு ஒத்துழைப்பையும் வழங்கப்போவதாக தெரிவித்தார்.

தமது நிறுவனம் முதலீட்டு நடவடிக்கைகளை ஊக்குவிக்க விசேட நம்பிக்கை நிதியம் ஒன்றையும் ஏற்படுத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இவ் விசேடநிதியத்தை நடைமுறைப்படுத்தும் சாத்தியம் குறித்து தாம் ஆராய்ந்து வருவதாகவும் மிகவிரைவில் இந்நிதியத்தை ஆரம்பிக்கவுள்ளதாகவும் அவர்குறிப்பிட்டார். (ச-8)

## கலவானை...

கலவானை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். துப்பாக்கிப்பிரயோகம் செய்தவர்கள் இரத்தினபுரி பகுதியை நோக்கிச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. சர்ப்பய எனப்படும் கும்பலே இந்தச்சம்பவத்திற்குக் காரணமெனக் கண்டறியப்பட்டுள்ளதாக கலவாணை பொலிஸார் தெரிவித்தனர்.(ச-4)

## டக்ளஸ்...

இதனாலேயே இருவருக்கும் இடையே வாக்குவாதம் இடம் பெற்றது. இந்நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரனுக்கு ஆதரவாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப்பாராளுமன்ற உறுப்பினர்கள் வாதாட்டத்தில் இறங்கினர். (ச-4)

## சிவராமின்....

"பேனாவுக்கு எதிர் துப்பாக்கியா", "உரிமைக்காக ஓங்குகின்ற பேனாவை ஆயுதமுனைக்கு அடகுவைக்க மாட்டோம். "ஊடகவியலாளர்களின் உரிமையை அரசே பாதுகாக்கவேண்டும்".

"ஊடகங்களை பாதுகாப்பாயாக". "சிவராமின் கொலைக்கு அரசேபதில்கூறு" இதேவேளை அந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழ் சிங்கள மற்றும் வெளிநாட்டு ஊடகவியலாளர்கள், பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகள், அரசியல் பிரமுகர்களென ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்டனர். ஆர்ப்பாட்டத்தின் முடிவில் பொதுக்கூட்டம் இடம் பெற்றது. இதில் ஊடகவியலாளர்கள் பலர் உரையாற்றினர். பத்திரிகை சுதந்திரத்திற்கான சர்வதேச தினமான நேற்று இந்த ஆர்ப்பாட்டம் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-08)

## விடுதலைப்....

மட்டக்களப்பு மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் விடுதலைப்புலிகளால் முறையிடப்பட்டுள்ளது. இதேவேளை மட்டக்களப்பு மாவட்டக் கண்காணிப்புக்குழு அலுவலக அதிகாரி விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் ஹெலன் தெரிவித்துள்ளார்.

தாக்கப்பட்ட அலுவலகத்திற்குச் சென்ற கண்காணிப்புக்குழுவினர் சேதவிபரங்களைப் பார்வையிட்டதுடன் சம்பவம் குறித்து விடுதலைப் புலிகள் பொலிஸ் மற்றும் இராணுவத்திடம் விசாரணைகளை மேற்கொண்டனர். (ச-8,7)

## கழுத்தில்....

தரணைகண்ட பிரஸ்தாப இளைஞனின் சகோதரன் உடனடியாக யாழ்.பொலிஸாருக்கு அறிவித்தார்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

நேற்றுக்காலை சம்பவ இடத்திற்குச் சென்ற யாழ்.மாவட்ட மேலதிக நீதிவான் ஸ்ரீநிதிநந்தசேகரன் மரணவிசாரணையின் பொருட்டு சடலத்தை யாழ். போதனாவைத்தியசாலையில் ஒப்படைக்க உத்தரவிட்டார்.மரண விசாரணையின் பின்னர் நேற்று மதியம் சடலம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது இதேவேளை இச்சம்பவம் தொடர்பாக சிலர் பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.இக்கொலையுடன் தொடர்புடையவர்களைகண்டுபிடிக்கும் பணியில் யாழ். பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (ச-19,130,27)

**விற்பனையாளர் தேவை**

விநாயகர் காகிதாதிகள் விற்பனை நிலையத்திற்கு ஆண்/பெண் விற்பனையாளர் தேவை 156/1 1-ம்குறுக்குத்தெரு யாழ்ப்பாணம் (வேம்படி பாடசாலைமுன்)

# அரசு கவிழ்ந்தாலும்...

இந்தப்பொதுக்கட்டமைப்புக்கு அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பியே எதிர்ப்புத்தெரிவித்து வருகிறது

நாம்சமாதானம் தொடர்பிலோ இனப்பிரச்சினை தொடர்பிலோ முன்னெடுக்கும் ஒவ்வொரு செயலுக்கும் ஜே.வி.பி.எதிர்ப்புத் தெரிவித்துவருகின்றது.ஜே.வி.பியின் இச்செயல்களை இனியும் பொறுத்திருக்க எம்மால் முடியாது என ஜனாதிபதி கூறினார்.

• முன்னெடுக்கபட்டு வரும் பொதுக்கட்டமைப்பினை விடுதலைப் புலிகளுடன் இணைந்து உருவாக்கினால் தாம்அரசாங்கத்தில் இருந்து விலகுவதாக ஜே.வி.பி. ஏற்கனவே அறிவித்திருந்தது. அதனை நடைமுறைப்படுத்த நாங்கள் ஜே.வி.பியை பணிக்கின்றோம். ஏனெனில் நான் பொதுக்கட்டமைப்பினை அமைப்பது உறுதி. எனவே ஜே.வி.பி. அரசாங்கத்தில் இருந்து வில்குவதுதான் சரியான வழிஎன ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில் பொதுக்கட்டமைப்பு தொடர்பாக சர்வஜன வாக்கெடுப்பு நடாத்தப்பட்டால் 60சதவீதமானோர் சாதகமாக வாக்களிப்பர் என ஜனாதிபதி நம்பிக்கை தெரிவித்தார்.

முன்னெடுக்கப்பட்டு வரும்பொதுக்கட்டமைப்பில் விடுதலைப்புலிகள் சட்டரீதியாக தொடர்புபடாவிட்டாலும் உத்தியோகபற்றற்றமுறையில் அபிவிருத்தி நடவடிக்கைகளை 7வருடங்களாக கொண்டு சென்றனர். பழையகதைகளை கதைத்துக்கொண்டிருப்பதனால் இதற்கு தீர்வு கிடைக்கப்போவதில்லை.

பொதுக்கட்டமைப்பினை வேண்டாம் எனக்கோருவோருடன் பேச்சுவார்த்தை நடாத்திப்பார்த்துள்ளேன். சிலரிடம் அதற்குத்தீர்வு இல்லை அப்படியானால் மீண்டும் யுத்தத்தினை ஆரம்பித்து சகலரையும் கொன்றொழிப்போம் எனக் கூறும்போது அதற்கு ஆம்எனக் கூறமுடியாது.

யுத்தத்தில் அரசாங்கம் வெற்றி பெறமுடியாது என்பது விடுதலைப் புலிகளுக்கு நன்றாகவே தெரியும் அவர்களுக்கு முடியாது, எமக்கும் முடியாது. இதுவே உண்மை நிலையாகும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

தனிஅரசாங்கம் ஒன்றிற்காக போராடிய தமிழீழ விடுதலைப்புலிகள் அந்தநிலைப்பாட்டில் இருந்து விலகி அரசாங்கத்துடன் இணங்கிச்செயற்பட முன்வந்துள்ளமை தேசியம் என்ற அடிப்படையில் கிடைத்த பெருவெற்றியாகும்.

இதனால் எந்தந்தரப்பினர் எதிர்த்தபோதிலும் இந்தப்பெரும் சந்தர்ப்பத்தினை பயன்படுத்திக் கொள்ளவேண்டும். கடந்த 20ஆண்டுகளுக்குள் அதாவது இந்தப்பிரச்சினை ஆரம்பித்த நாள்தொட்டு இன்று வரை பிரச்சினையை தீர்ப்பதற்கான இவ்வாறானதொரு சரியான சூழ்நிலை உருவாகவில்லை.

தற்போது வேறுஎப்போதும் இல்லாதவகையில் சமாதானத்திற்கான முதலாவது அடியெடுத்துவைத்துள்ளோம். முதலாவது அடியினை வைப்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

தனி அரசைக்கோரிய விடுதலைப் புலிகள் அரசாங்கத்துடன் இணைந்து முதல் தடைவையாக நிர்வாக முறைக்குள் உள்வர உடன்பட்டுள்ளனர் என்றார் ஜனாதிபதி.

நாட்டினை அபிவிருத்தி செய்வதற்காக தற்போது முன்வைக்கப்பட்டுள்ள பொதுக்கட்டமைப்பு தொடர்பில் மதத்தலைவர்களின் கருத்துக்களை பெறுவதே நேற்றைய பொதுக்கூட்டத்தின் முக்கிய அம்சமாக காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது சமாதானம் மற்றும் நல்லிணக்கத்திற்கான தேசியஆலோசனை சபையின் புதிய இணையத்தளம் ஒன்றும் ஜனாதிபதியால் ஆரம்பித்து வைக்கப்பட்டமை விசேட அம்சமாகும். (ச-4)

**மே 7 முதல்**

பாடநூல் வெளியீட்டிலும் நாடளாவிய விற்பனை மேம்படுத்தலிலும் கொழும்பில் முன்னணி வகிக்கும் லங்கா புத்தகசாலை அனுசரணையுடன்

யாழ். பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றத்தின்


**மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்**

அனைத்துத் தரப்பினருக்கும் ஏற்ற உள்நாட்டு வெளிநாட்டு (ஆங்கில, தமிழ்) பாடநூல்களும், அகராதிகள், கவிதைகள், சிறுகதைகள், சமய இலக்கியங்கள், மருத்துவ நூல்கள் மற்றும் பல

இடம் : யாழ். பல்கலைக்கழக வணிகத்துறை விரிவுரை மண்டபம்
காலம் : 2005 மே மாதம் 7 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை
நேரம் : காலை 9.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை (புதியநேரம்)
(வார இறுதி நாட்களும், விடுமுறை நாட்களும் உட்பட)

சிறப்பு விலைக்கழிவு

தொடர்புகளுக்கு
தலைவர், வணிக மாணவர் மன்றம்,
யாழ். பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் (C-1354)










இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.05.2005 இல் அச்சிட்டு வெளிமிடப்பட்டது.